நடப்பு நிகழ்வுகள், செப்டம்பர்-2019

தமிழ்நாடு

❖ **தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி, ஸ்மார்ட் கட்டம் அமைப்புமுறையின் (Smart Grid System) செயல்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு சப்போல்க் கவுண்டியிலுள்ள இங்கிலாந்தின் ஐ.பி சுவிட்ச் ஸ்மார்ட் கட்டத் தொழிற்சாலையை பார்வையிட்டார்.**

- ஏற்கனவே, தமிழக அரசாங்கம் இத்திட்டதிற்காக தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (Tangedco) ரூ.7 கோடியை விடுவித்துள்ளது.
- தமிழ்நாடு, 8,000 மெகாவாட்டிற்கு அதிகமான காற்று மின்சாரமும் மற்றும் கிட்டத்தட்ட 2500 மெகாவாட்டிற்கு சூரியசக்தி மின்சாரமும் பெற்று, இந்தியாவின் ஒருசில மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.
- முதலமைச்சர் தற்போது மாநிலத்திற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கொண்டுவர, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் துபாய் ஆகிய மூன்று நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார்.

❖ **இந்த வருடத்தின் அக்டோபர் 11 மற்றும் 13ற்கிடையே அட்டவணைப்படுத்தப்பட்டு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பின் இடையேயான இந்திய – சீன அமைப்பு சாரா உச்சிமாநாட்டின் இரண்டாவது கூட்டத்தை சென்னைக்கு அருகிலுள்ள பல்லவகால வரலாற்று கடற்கரை நகரமான மாமல்லபுரத்தில் கூட்டப்படலாம்.**

- ஆனால், சந்திக்கும் இடம் இன்னும் உறுதிபடுத்தப்படவில்லை.

❖ **சதுப்பு நிலங்கள் புனரமைப்பு மீதான தேசிய திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள 100 முன்னுரிமை சதுப்பு நிலங்களில் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கரனை, பாயின்ட் காளிமர் புளிகாட் மற்றும் கூந்தன்குளம் சதுப்புநிலங்கள் உள்ளடங்குகின்றன.**

❖ **சென்னையில் உயிரி மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 – ஐ அமுல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.**

- 16 உறுப்பினர் கொண்ட இந்த குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் தலைமை வகிப்பார் மற்றும் பல்வேறு துறைகள் மற்றும் அரசுமுகமைகளின் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம்பெறுவர்.
- இக்குழு பிரதானமாக மாவட்டச் சுற்றுச்சூழல் திட்டத்தை வரைவதையே முக்கியப் பொறுப்பாகக் கொண்டுள்ளது.
- இக்குழு, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், வருவாய் பொதுச் சுகாதார இயக்ககம், மீன்வளத்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளைத் தாண்டி பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டல அலுவலர்களும் இடம் பெறுவார்கள்.
- உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளின் அமுலாக்கத்தின் மீதான மாதாந்தர அறிக்கையை இந்தக் குழு அரசிடம் சமர்பிக்கும்.

❖ **உதகமண்டலத்தை நோக்கிய நெடுஞ்சாலைகள் மீதான அனைத்து சோதனை சாவடிகளிலும் நெகிழிகளை பயன்படுத்துவதை தடுக்கும் சென்னை உயர்நீதிமன்ற ஆணையை நீலகிரி மாவட்ட நிர்வாகம் அமுல்படுத்தியுள்ளது.**

❖ **2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO) சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரின் வழக்குகளை நடத்துவதற்கு மூன்று சிறப்பு துரித நீதிமன்றங்களை அமைப்பதற்கு தமிழக சமூக நலத்துறை திட்டமிட்டுள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், மாநிலத்தில் ரூ.2780 கோடி முதலீடு செய்வதற்கு 16 அமெரிக்க நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது.**

❖ **சினிமா தியேட்டர்களுக்கான 100 சதவீத ஆன்லைன் கட்டண முறையை அமுல்படுத்த தமிழ்நாடு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம் செப்டம்பர் 4-ல் ரூ.2300 கோடியை தமிழகத்தில் முதலீடு செய்ய ஈர்க்கும் 19 அமெரிக்க நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டது.**

- இந்த ஒப்பந்தங்கள், சிலிகான் வேலியிலுள்ள சான் ரோசில் நடந்த ஒரு கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமியால் கையொப்பமிடப்பட்டன.
- ஏற்கனவே, செப்டம்பர் 3-ல் 20,000 க்கு மேல் வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய ரூ.2780 கோடி மதிப்பு முதலீடுகளுக்காக 16 அமெரிக்க நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் தமிழக அரசு கையொப்பமிட்டது.
- புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் தமிழக அரசுடன் கையொப்பமிட்ட அமெரிக்க நிறுவனங்கள் பின்வருமாறு:

  Incoln Electric, Wearable Mems, Caldon Biotech, ZL Technologies, Kapisoft, Kloud Learn, Sierra Health Alerts, Acts Global Tech Solutions, Ripe. Io, Latent.ao, Achireum, Nature Mills, SAi, ACS Global Tech Solutions, Dotsolved Sytems, TIE Global, USISPF, Google X and DCF Ventures, among others.
- இவ்வித ஒப்பந்தங்கள் மாநிலத்தில் 6,500–க்கு மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.
- மேலும் தமிழக முதலமைச்சர், அமெரிக்க தொழில்முனைவோர் கழகத்திடமிருந்து உதவிபெரும் எண்ணியல் துரிதப்படுத்தும் (Digital Accelerator) திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்திற்காக தமிழக அரசு ரூ.50 கோடியை ஒதுக்கீடு செய்யும்.
- மேலும், தமிழக முதல்வர், சான் பிரான்சிஸ்கோவில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதாரத்துறைகளிலிருந்து வரும் தொழில்முனைவோர்களின் முதலீட்டு வசதிக்காக 'யாதும் ஊரே' என்ற ஒரு முதலீட்டு வசதித்திட்டத்தை தொடங்கிவைத்தார்.

❖ **தமிழ்நாட்டிலிருந்து இரண்டு ஆசிரியர்கள் மற்றும் புதுச்சேரியிலிருந்து 1 ஆசிரியர், ஆசிரியர்தின விழாவில் சிறந்த ஆசிரியர்களுக்கான தேசிய விருது ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.**

- கரூர் மாவட்டத்திலுள்ள ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆர்.செல்வக்கண்ணன் மற்றும் கோபி செட்டி பாளையத்தில் ஒரு பள்ளியின் சமூக அறிவியல் ஆசிரியர் மன்சுரலி ஆகிய இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.
- எஸ்.சசிக்குமார் என்பவர் புதுச்சேரியிலுள்ள ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆவார்.
- ஆசிரியர்தின விழாவில் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் நாடு முழுவதும் தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 46 ஆசிரியர்களுக்கு ஜானதிபதி ராம்நாத் கோவித் விருதுகளை வழங்கினார்.

❖ **தமிழ்நாடு, மாநில கூரை மீதான சூரியஒளி ஈர்ப்புத்திறன் குறியீட்டில்** (State Rooftop Solar Attractiveness Index – SARAL) **10வது தரப்படுத்தப்பட்டுள்ளது.**

- கர்நாடக முதல் தரத்தையும், தெலுங்கானா இரண்டாவது தரத்தையும், குஜராத் மூன்றாவது தரத்தையும் மற்றும் ஆந்திரபிரதேசம் நான்காவது தரத்தையும் பெற்றுள்ளன.
- தமிழ்நாட்டிற்கு ஒட்டுமொத்தமாக 50.9 புள்ளிகள் கொடுத்து A+ நிலை வழங்கப்பட்டுள்ளது.

❖ **சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வி.கே.தகில்ரமணி, ஒரு நகலை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோஹாய்க்கு அனுப்பிவிட்டு தனது ராஜனாமாவை ஜனாதிபதி ராம்நாத் கோவித்திடம் சமர்பித்தார்.**

- இந்தியாவிலுள்ள 25 உயர்நீதிமன்றங்களில் நீதிபதி தகில்ரமணி மற்றும் நீதிபதி கீதாமித்தல் ஆகிய இரு பெண்கள் மட்டுமே உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளாக உள்ளன.
- சென்னை உயர்நீதிமன்றம் ஜுன் 26, 1862-ல் ஏற்படுத்தப்பட்ட மூன்று பழமையான நீதிமன்றங்களில் ஒன்றாகும்.
- சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 75 ஆகும். ஆனால் கௌகாத்தி உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 4 மட்டுமே.
- நீதிபதி தகில்ரமணி அக்டோபர் 2, 2020-ல் ஓய்வுபெறவுள்ளார். ஸ

❖ **தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி அமெரிக்காவிலுள்ள சான் பிரான்சிஸ்கோவின் ப்ரீமான்ட்டிலுள்ள டெஸ்லா மின்சார வாகன உற்பத்தி அலகை பார்வையிட்டார்.**

- முதலமைச்சருடன் M.C சம்பத், R.B.உதயகுமார் மற்றும் K.T. ராஜேந்திரபாலாஜி ஆகிய மாநில அமைச்சர்களும், தலைமைச் செயளர் கே.சண்முகமும் இருந்தனர்.
- மேலும், முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட இந்த அணி அமெரிக்காவிலுள்ள பல்வேறு ஆட்டோமொபைல் அலகுகளைப் பார்வையிட்டனர்.
- குறிப்பாக, சான் பிரான்சிஸ் கோவிலுள்ள மின்சார வாகனம் தயாரிக்கும் Bloom Energy நிறுவனத்தை அவர்கள் பார்வையிட்டனர். அந்த நிறுவனத்தின் தலைவராக தமிழ்நாட்டைச் சேர்ந்த கே.ஆர்.ஸ்ரீதர் உள்ளார்.

❖ **மேட்டூரிலுள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் செப்டம்பர் 7-ல் அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது.**

- 1934-ல் இந்த நீர்த்தேக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து 43வது முறையாக முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

❖ **2019-2020 ஆம் ஆண்டின் கல்வி உலக இந்திய பள்ளித்தரங்களில் நாடு முழுவதுமுள்ள பல்வேறு பிரிவுகளில் சென்னையிலுள்ள 5 பள்ளிகள் 10 தரத்திற்குள் வந்துள்ளன.**

- அரசு பள்ளிகள் பிரிவில் சென்னை IIT யிலுள்ள கேந்திர வித்யாலயா இரண்டாவது தரத்தைப் பெற்றுள்ளது.
- இருபாலர் படிக்கும் பள்ளிகளின் பிரிவில் அடையாரிலுள்ள KFI பள்ளி 7வது தரத்தையும், சைசியா பள்ளி 10 வது தரத்தையும் பெற்றுள்ளன.

❖ **மத்திய அரசின் கொள்கை சிந்தனை-குழுமான நித்தி ஆயோக், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம்** (CMRL) **தனது இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக பல்வேறு பன்னாட்டு வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்குரிய ஒப்புதலை வழங்கியுள்ளது.**

- மேலும், பொருளாதார விவகாரங்களுக்கான துறையும் இதற்கு ஒப்புதலளித்துள்ளது.

- சென்னை மெட்ரோவின் இரண்டாவது கட்டத்தின் 118.9 கிலோ மீட்டர் சாலை அமைப்பதற்கு அதன் மதிப்பீட்டு செலவாக ரூ.69,180 கோடி கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையை பல்வேறு முகமைகளிடமிருந்து சென்னை மெட்ரோ கடனாக பெறவுள்ளது.
- இந்த ரூ.69,180 கோடியில் மாநில அரசாங்கம் ரூ.13,723 கோடியை ஆரம்பமாக வழங்கவுள்ளது. மீதமுள்ள ரூ.55,457 கோடியில் 20 சதவீதத்தை மாநில அரசும், 20 சதவீதத்தை மத்திய அரசும் மற்றும் 60 சதவீதத்தை வங்கிகளும் வழங்கவுள்ளன.
- ஏற்கனவே சென்னை மெட்ரோ 52 கிலோமீட்டர் சாலை அமைப்பதற்கான செலவு ரூ.20,196 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency – JICA) ஒப்பந்தத்தின் மூலம் பெற்றுள்ளது.
- மேலும் உள்ள பணிகளுக்காக, ஆசிய வளர்ச்சி வங்கி (ADB), ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கி (AIIB), புதிய மேம்பாட்டு வங்கி (NDB) மற்றும் உலக வங்கி போன்ற முகமைகளிடமிருந்து சென்னை மெட்ரோ நிறுவனம் கடன் பெறவுள்ளது.

❖ **இந்த வருடம் பிரதான் மந்திரி ∴பாசல் பீம யோஜனா (PMFBY) என்ற பிரதம மந்திரியின் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 25 லட்சம் விவசாயிகளைக் கொண்டுவர மாநில விவசாயத்துறை விரும்புகிறது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம் செப்டம்பர் 9-ல் துபாயிலுள்ள முதலீட்டாளர்களுடன் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது.**

- இந்த ஒப்பந்தங்களால் மாநிலத்தில் கிட்டத்தட்ட ரூ.3750 கோடி முதலீடு ஏற்படும் என்றும் மற்றும் கிட்டத்தட்ட 10,800 மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி மூன்று நாடுகள் அலுவலக சுற்றுப்பயணத்தில் 14 வது நாளாக UAE –ல் இருந்தார்.
- ஏற்கனவே, முதலமைச்சர் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளிலுள்ள தொழில்முனைவோர்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்வதன் பேரில் சந்தித்தார்.
- ஒட்டுமொத்தமாக, இங்கிலாந்து, அமெரிக்க மற்றும் UAE ஆகிய மூன்று நாடுகளின் 13நாள் சுற்றுப்பயணத்தில் 37,300 மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய ரூ.8,830 கோடிக்கான வெளிநாட்டு முதலீடுகளின் ஒப்பந்தங்களில் முதலமைச்சர் கையொப்பமிட்டார்.

❖ **பெரும்புகழுடைய மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இரண்டாவது சிறந்த ஸ்வட்ச் சின்ன இடம் (Swachh Iconic Place) என்று மத்திய ஜல்சக்தி அபியான் அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

❖ **இந்திய புவியியல் குறியீடுகள் பதிவிலிருந்து புவியியல் குறியீடு அடையாளத்தை பிரபலமான ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா பெற்றுள்ளது.**

- சமீபத்தில், பழனி பஞ்சாமிர்தம், திண்டுக்கல் பூட்டு மற்றும் காரைக்குடி கண்டாங்கிச்சேலை போன்றவை புவியியல் குறியீடுகளைப் பெற்றுள்ளன.

❖ **பொறியியல் சேர்க்கைகளைப் போல மாநிலத்திலுள்ள பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அடுத்த கல்வியாண்டிலிருந்து (2020-2021) ஒற்றைச் சாளர சேர்க்கைகளை தமிழ்நாடு அரசாங்கம் ஆன்லைன் மூலம் அறிமுகப்படுத்தவுள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், பதிவுத்துறையை ஒரு வருடத்திற்குள் பதிவின் எளிதாக்கப்பட்ட மற்றும் வெளிப்படையான நிர்வாகத் (Simplified and Transparent Administration of Registration – STAR) திட்டத்தின் STAR 3.0 என்ற மேம்படுத்தப்பட்ட முறையை அமுல்படுத்தவுள்ளது.**

❖ **பிரதம மந்திரி கிசான் மாந்தன் யோஜனா (PM-KMY) திட்டத்தில் கிட்டத்தட்ட 3 லட்சத்திலிருந்து 3½ லட்சம் சிறு மற்றும் நடுத்தர விவசாய பயனாளிகளை தமிழ்நாடு பெற்றிருக்கும்.**

- இந்தத் திட்டம் செப்டம்பர் 12-ல் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம், 60 வயதடைந்த பயனாளிகளுக்கு மாதத்திற்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.3000 ஐ வழங்குகிறது.
- சிறு மற்றும் நடுத்தர பிரிவின் கீழ் 18 வயதிலிருந்து 40 வயது வரையுள்ள குழுவில் அரசால் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடைய மக்கள் 4.37 லட்சம் ஆவர்.
- இந்தப்பிரிவில் வேலூர் 32,776 நபர்களைப் பெற்று முதலிடம் வகிக்கிறது.
- இரண்டாவதாக சேலமும் (27,842 பேர்) மற்றும் மூன்றாவதாக கடலூரும் (26,065 பேர்) உள்ளன.

❖ **தமிழ்நாடு அரசாங்கம் தனது மிகவும் விருப்பமுள்ள 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 16 உறுப்பினர்கள் கொண்ட பலதரப்பு குழுவை அமைத்துள்ளது.**

- கங்கைத் தண்ணீரை பாதுகாத்தல் மற்றும் தூய்மைப்படுத்துதல் வழியில் காவேரி நிரையும் அதன் துணை ஆறுகளின் நீரையும் பாதுகாக்கும் நோக்கத்தில் இத்திட்டம் உள்ளது.
- முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி நாட்டின் பிரதான திட்டமான நமாமி கங்கா வரிசையில் சென்ற ஜூலை மாதத்தில் இத்திட்டத்தை அறிவித்தார்.
- இந்தக் குழுவிலுள்ள உறுப்பினர்கள், நீர்வளங்கள் அமைச்சகம், நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர்வளங்கள், ஊரக வளர்ச்சி, சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள், TWAD வாரியம், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்றவற்றிலிருந்து வருகின்றனர்.
- தற்போது, ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் காவேரி டெல்டா பகுதிகளில் காலநிலை மாற்ற ஏற்புத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது மற்றும் அதற்கான வரவு செலவு திட்டம் ரூ.1560 கோடியாகும்.
- மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் தண்ணீர் மற்றும் சக்தி ஆலோசனை பணிகள் (Water and Power Consultancy Services – WAPCOS), காவேரி ஆறு மற்றும் அதன் துணை ஆறுகளான பவானி, அமராவதி மற்றும் நொய்யல் போன்றவற்றின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு பற்றிய விரிவான அறிக்கை தயாரிப்பதற்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திற்காக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.7000 கோடியிலிருந்து 10,000 கோடி வரையாகும். இதற்காக மாநில முதலமைச்சர் ஜூன் மாதத்தில் பிரதமரை சந்தித்து நிதி ஆதரவு வேண்டினார்.

❖ **வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, மிருககாட்சி சாலைகள் மற்றும் நீர்வாழ்காட்சி சாலைகளின் உலக சங்கத்தில்** (World Association of Zoos and Aquariums – WAZA) **ஒரு அமைப்பு உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம் செப்டம்பர் 16-ல் தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை 2019 ஐ வெளியிட்டது.**

- ரூ.50,000 கோடி முதலீட்டை இலக்கு வைத்து மற்றும் 1.5 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இந்தக் கொள்கையை முதலமைச்சர் வெளியிட்டார்.
- அதன் நகல்களை தொழில்துறை அமைச்சர் எம்.சி சம்பத் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் பெற்றுக் கொண்டனர்.

❖ **சென்னை புறவட்டச் சாலை திட்டத்தின்** II **மற்றும்** III **வது கட்டத்திற்காக ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கி** (AIIB) **மற்றும் பன்னாட்டு மேம்பாட்டிற்கான** OPEC **நிதி** (OPEC Fund

for International Development – OFID) **ஆகியவற்றிடமிருந்து** $ 478.07 **மில்லியன் கடன் பெறுவதற்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் முன்வரைவுக்கு மத்திய அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது.**

- கொல்கத்தா, திருப்பதி மற்றும் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் வடசென்னையிலுள்ள தச்சூரிலிருந்து ஸ்ரீபெரும்பத்தூருக்கு 57கிலோ மீட்டர் நீளத்தில் இந்த புறவட்டச்சாலை அமைக்கப்படும்.
- இத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட மொத்த செலவு $827.43 மில்லியனாகும்.
- இந்த புறவட்டச்சாலை பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் மற்றும் எண்ணூர், காட்டுப்பள்ளி போன்ற துறைமுகங்களையும் இணைக்கும்.
- இத்திட்டம் போக்குவரத்து நேரத்தை குறைப்பதோடு மட்டுமல்லாமல் மாசுவையும் குறைந்தபட்சமாக்கும் என்று எதிர்பாக்கப்படுகிறது.
- தமிழ்நாடு ஏற்கனவே இந்த வருட ஆரம்பத்தில் முதல்கட்டமாக எண்ணூர் துறைமுகத்திலிருந்து தச்சூர் வரையான JICA வுடன் ரூ.2,470 கோடி ஒப்பந்தம் மேற்கொண்டது.

❖ **அதானி சக்தி குழுமம் சத்தீஷ்கரிலுள்ள தனது கிளை அமைப்பான ரெய்கார் சக்தி உற்பத்தி நிறுவனத்தின்** (Raigarh Energy Generation Ltd – REGL) **மூலமாக அடுத்த மூன்றாண்டு காலத்திற்கு தமிழ்நாட்டிற்கு 185 மெகாவாட் வழங்கவுள்ளது.**

❖ **மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் உருவாக்கப்பட்ட வலைதள அடிப்படையிலான முடிவு ஆதரவு முறையான** TNSMART, **ஐ.நாவின் ஆசியா மற்றும் பசுபிக் பகுதிக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையத்திடமிருந்து** (Economic and Social Commission for Asia and the Pacific – ESCAP) **நேர்மறை விளக்கத்தைப் பெற்றுள்ளது.**

- இந்த TNSMART, 2018 ஆம் ஆண்டின் வடகிழக்கு பருவமழையின் போது குறிப்பாக கஜா புயலின் போது பயன்படுத்தப்பட்டது.

❖ **பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடமான ரிப்பன் கட்டிடம் தண்ணீர் பயன்பாட்டில் தன்னிறைவு பெற்று நகரிலுள்ள முதலாவது பொதுக் கட்டிடமாக வந்துள்ளது.**

- ரூ.50 லட்ச திட்டச்செலவில் கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்து கழிவரை, ஏர்கன்டிஷன் மற்றும் தோட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.
- இக்கட்டிடத்திற்கு ஒரு நாளைக்கு 45 கிலோ லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதில் 15,000 லிட்டர் ஏர்கன்டிஷனுக்கும், 5000 லிட்டர் தோட்டத்திற்கும் மற்றும் மீதமுள்ளவை கழிவறைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், முதலமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய மூன்று நாடுகள் விஜயத்தின்போது முதலீட்டு வசதி மற்றும் ஏற்றுக்கொண்ட முதலீடுகளுக்கான ஒற்றைச் சாளர அனுமதிக்கான ஒரு உயர் அதிகாரக்குழுவை அமைத்துள்ளது.**

- இந்த குழு முதலமைச்சரால் தலைமை வகிக்கப்படும்.
- சமீபத்தில் முதலமைச்சரால் தலைமை வகிக்கப்பட்ட ஒரு குழு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் UAE ஆகிய மூன்று நாடுகளுக்கும் 13 நாட்கள் விஜயம் செய்தது.
- அப்போது 41 நிறுவனங்களுடன் ரூ.8835 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அது 35,520 மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் முயற்சியானது.

❖ **தமிழ்நாடு 2019 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி விகிதம் 8.17 சதவீதமாக பதிவு செய்துள்ளது.**

- இது கடந்த ஆண்டில் 6.81 சதவீதமாக இருந்தது.

❖ **Tamil Nadu government – signed a Memorandum of Understanding (MoU) with Bill and Melinda Gates Foundation (BMGF) on September 19 over faecal sludge treatment plants in urban local bodies across the State.**

❖ **முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.68.6 கோடி வரவுச் செலவு திட்டத்தில் வெள்ளப் பாதுகாப்புப் பணியைத் தொடங்கி வைத்தார்.**

- இந்த வெள்ளப் பாதுகாப்புப் பணி, 172 மில்லியன் கன அடி தண்ணீரைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், தாம்பரம், பெருங்குளத்தூர், முடுச்சூர், வரதராஜபுரம், சேலையூர் மற்றும் பள்ளிக்கரனை பகுதிகளில் வசிக்கும் 6 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

❖ **அனைத்து மாநில அரசாங்க கட்டடங்களின் மேல் கூரையில் சூரியஒளி சக்தி முறையை ஏற்படுத்துவதற்கு சக்தி திறன் பணிகள் நிறுவனத்துடன்** (Energy Efficiency Services Limited – EESL) **தமிழ்நாடு சக்தி மேம்பாட்டு முகமை** (Tamil Nadu Energy Development Agency – TEDA) **ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.**

❖ **விவசாய உற்பத்தியில் சிறந்த செயல்பாட்டிற்காக க்ரிஷி கர்மன் விருதை மீண்டும் தமிழ்நாடு பெற்றுள்ளது.**

- 2017-2018 ஆம் ஆண்டிற்கான எண்ணெய்வித்துக்கள் உற்பத்திக்கான இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2017-2018 ஆம் ஆண்டின் ஒரு ஹெக்டருக்கு 2,729கி உற்பத்தி வீதம் மாநிலத்தில் மொத்த உற்பத்தி 10.382 லட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- ஆகில இந்திய அளவில் ஒரு ஹெக்டர் நிலத்தில் 1284கி எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகின்ற போது, தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 113 சதவீதம் அதிகமாகும்.
- 2017-2018 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 107.133 லட்சம் டன்கள் ஆகும்.
- 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து இவ்விருதை 5 வது முறையாக தமிழ்நாடு பெறுகிறது.
- 2011-2012 மற்றும் 2015-2016 ஆகிய இரண்டு ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி செயல்பாட்டிற்காகவும், 2013-2014 மற்றும் 2014-2015 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பயறுவகை உற்பத்தி செயல்பாட்டிற்காகவும் தமிழ்நாடு இவ்விருதைப் பெற்றது.

❖ **தமிழ்நாட்டிலுள்ள நாங்குனேரி மற்றும் விக்ரபாண்டி சட்டசபை தொகுதிகளுக்கும், புதுச்சேரியிலுள்ள காமராஜ் நகர் சட்டசபை தொகுதிக்கும் வரும் அக்டோபர் 21-ல் இடைத்தேர்தல்கள் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.**

❖ **நீதிபதி வி.கே.தகில் ரமனியின் ராஜனமாவைத் தொடர்ந்து செப்டம்பர் 20-ல் மத்திய அரசு ஒரு அறிவிப்பின் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தின் செயல் தலைமை நீதிபதியாக நீதிபதி வினீத் கோத்தாரியை நியமித்துள்ளது.**

❖ **சென்னை நகரிலுள்ள அடையார் ஆறு மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றின் கரைகளின் குடிசைகளில் வாழும் கிட்டத்தட்ட 28,000 மக்களை மறுகுடியமர்த்துவதற்கு $245 மில்லியனை (கிட்டத்தட்ட ரூ.1,744 கோடி) நிதியுதவியை உலக வங்கி வழங்கவுள்ளது.**

❖ **சண்டிகர் மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டும் 2016 முதல் 2018 வரை சாலை விபத்து இறப்புகளில் அதிகபட்ச வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளன.**

- 2016 லிருந்து 2018 வரை, சண்டிகர் 35 சதவீத சாலை விபத்து இறப்பு வீழ்ச்சியை பதிவுசெய்துள்ள போது, தமிழ்நாடு 29 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- 2016 மற்றும் 2018 ற்கிடையே அதிகபட்சமாக 5,002 சாலை விபத்து இறப்பு குறைந்துள்ளதாக தமிழ்நாடு அறிவித்துள்ளது.

❖ **இராமநாதபுரம் மாவட்டத்தை உள்ளடக்கி பாக் ஜலசந்தியில் நான்கு மாவட்டங்களில் ஒரு ஆழ்கடல் மீன்பிடிப்பு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசாங்கத்திற்கு ரூ.300 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது.**

- இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 1600 கோடியாகும். இதில் மத்திய அரசாங்கத்தின் பங்கு ரூ.800 கோடியாகும்.

❖ **தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர்.ஜே.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் என மறுபெயரிடப்பட்டது.**

❖ **சென்னை நகரின் துணைநகர ரயில் பணிகள் மற்றும் சென்னையிலிருந்து ஆறு பிரதான நகரங்களுக்கான ரயில் சேவைகள் ஆகியவை உள்ளடங்க 24 வழித்தடங்களில் தனியார் இயக்கும் இரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிடப்படுகிறது.**

❖ **இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் தலா 1 வீதம் மொத்தம் ஆறு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கான முன்வரைவுகளை தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசிடம் சமர்பித்துள்ளது.**

- தற்போது, சென்னையிலுள்ள 4 கல்லூரிகளை உள்ளடக்கி மாநிலத்தில் மொத்தம் 23 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.
- 2021-2022 வாக்கில் நாட்டில் மொத்தம் 75 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு பொருளாதார விவகாரங்கள் மீதான காபினெட் குழு ஆகஸ்ட் மாதத்தில் அனுமதியளித்துள்ளது.

❖ **தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் (TTDC) நீலகிரியில் மலையின் மீது பைக் ஓட்டுதல் மற்றும் பல்வேறு விதத்தில் கயிறு ஏறுதல் போன்ற வீரதீர விளையாட்டுக்களை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.**

- இப்படிப்பட்ட சுற்றுலாத்தளத்தில் இவ்வித வீரதீர செயலில் விளையாட்டு பூங்கா அமைவது மாநிலத்தில் இதுவே முதல்முறையாகும்.

❖ **மதுரைக் காமராஜ் பல்கலைக்கழகம் கீழடி கண்டுபிடிப்புகளை ஆய்வதற்கு மாநிலத்தில் முதலில் வந்த பல்கலைக்கழகமாகும்.**

- சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி கண்டுபிடிப்புகளை ஆய்வு செய்வதற்கு தமிழ்நாடு தொல்லியல் துறை, ஹார்வார்டு பல்கலைக்கழகம் மற்றும் மதுரைக் காமராஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றிடையே ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.

❖ **பரம்பிக்குளம் அலியார் திட்டத்தை உள்ளடக்கி இரு மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு தண்ணீர் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு தொடர்புடைய துறைகளின் செயலர்களால் தலைமை வகிக்கப்படும் 5 உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைப்பதற்கு தமிழ்நாடும் மற்றும் கேரளாவும் ஒப்புக் கொண்டுள்ளது.**

❖ **முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி செப்டம்பர் 26-ல் ரூ.5571 கோடி மதிப்புள்ள 15 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடவுள்ளார்; 5 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுள்ளார் மற்றும் 3 மற்ற அலகுகளில் உற்பத்தியை துவக்கி வைக்கவுள்ளார்.**

- மொத்தம் 23 திட்டங்களுக்கு ரூ.7,175 கோடி செலவிடப்படவுள்ளது.

- அதனால் மாநிலத்தில் 45,846 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சமீபத்திய அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் UAE ஆகிய மூன்று நாடுகளுக்கான முதலமைச்சரின் சுற்றுப்பயணத்தில் பல்வேறு துறைகளில் ரூ.8835 கோடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

❖ **ஒடிசா மற்றும் கேரளாவிற்கு அடுத்து, அரசு அலுவலகங்களிலுள்ள கையேடு கோப்புகளை மாற்றிவிட்டு அவற்றை 100சதவீதம் மின்னணு ஆக்குவதற்கு தமிழ்நாடு அரசாங்கம் முன்வந்துள்ளது.**

❖ **பொதுமக்கள் பங்கேற்புடனான 'மூன்றாம் கண்' திட்டமான CCTV கண்காணிப்பு கேமராவின் சிறந்த அமுலாக்கத்திற்காகவும் மற்றும் போக்குவரத்து விதிமீறலுக்கெதிராக ரொக்கமல்லா தண்டம் வழங்குவதற்கான எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்தியதற்காகவும் இரண்டு SKOCH விருதுகளை பெருநகர சென்னை காவல்துறை பெற்றுள்ளது.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், செப்டம்பர் 26-ல் €203 மில்லியன் கடன் உதவிக்காக KFW ஜெர்மன் மேம்பாட்டு வங்கியுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.**
- இந்த ஒப்பந்தம், முதல் கட்டத்தில் 2,213 BS-VI பேருந்துகள் மற்றும் 500 மின்சார பேருந்துகளை வாங்குவதற்கு உதவும்.
- இது, அடுத்த நிதியாண்டின் ஆரம்பத்தில் அனைத்து 8 போக்குவரத்துக் கழகங்களிலும் அறிமுகப்படுத்தப்படும்.

❖ **தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி.கே.பழனிச்சாமி, ரூ.7,175.71 கோடி முதலீடுகளை ஈர்க்கும் தானியங்கி கூறுகள் முதல் எரிசக்தி வரை மற்றும் தகவல் தொழில் நுட்பத்திலிருந்து ஜவுளிகள் வரையான பல்வேறு துறைகளின் நிறுவனங்களுடன் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளார்.**

❖ **தமிழ்நாடு அரசாங்கம், மாநிலத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மற்றும் அணுகமுடியாத பழங்குடியின கிராமங்களில் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசுசாரா அமைப்புகளை (NGOs) வரவேற்றுள்ளது.**
- இம்முயற்சி, பழங்குடியின குழந்தைகள் கல்வி பெறவும், அவர்களின் கல்வித்தரத்தை வளர்க்கவும் மற்றும் அவர்கள் பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிடாமல் தடுக்கவும் உதவுகிறது.
- மாநிலத்தின் படிப்பறிவு 80 சதவீதமாக உள்ளபோது, பழங்குடியினர் படிப்பறிவு 54.34 சதவீதமாகவே உள்ளது.

❖ **முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி செப்டம்பர் 28-ல் தலைமைச் செயலகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக "எனது மருத்துவமனை - எனது பெருமை" திட்டத்தின்கீழ் நான்கு மருத்துவ அவசர ஊர்திகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.**
- சென்னையை தலைமையிடமாகக் கொண்ட அசோக்லேலாண்டு நிறுவனம் ரூ.60 லட்சம் செலவு மதிப்பீட்டில் இந்த நான்கு மருத்துவ அவசர ஊர்திகளை நன்கொடையாக அளித்துள்ளது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், அரசாங்க பேருந்துகளின் நேரலை போக்குவரத்து மற்றும் அதற்கிணங்க திட்டமிடுவதற்கு பொதுமக்களுக்கான ஒரு புதிய செயலியை வளர்த்துள்ளது.**
- Locate and Access My Bus – LAMB என்பது அந்தப் புதிய செயலி.
- இந்த செயலி, சென்னை மாநகரிலுள்ள 3,300 மாநகரப் பேருந்துகளை உள்ளடக்கி மொத்தம் 21,800 பேருந்துகளின் தகவல்களை வழங்கும்.

மாநிலங்கள்

❖ **அஸ்ஸாமில் குடிமக்கள் தேசிய பதிவேட்டின் இறுதி பிரதி ஆகஸ்ட் 31-ல் மத்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.**

- மொத்தம் 3.29 கோடி மக்கள் குடிமக்கள் தேசிய பதிவேட்டிற்காக விண்ணப்பித்திருந்தனர்.
- அதில் 3.11 கோடி மக்களின் பெயர் மட்டுமே இறுதி அட்டவணையில் இடம் பெற்றிருந்தது.
- அதாவது, 3,11,21,004 மக்களின் பெயர் குடிமக்கள் தேசிய பதிவேட்டின் இறுதி பிரதியில் தகுதியுள்ளவர்களாக இடம் பெற்றிருந்தனர்.
- 19,06,657 மக்கள் அதில் இடம் பெறவில்லை. இதில் குடியுரிமைக்கு விண்ணப்பிக்காதவர்களும் உள்ளடங்கும்.
- ஒரு நபர், குடிமக்கள் தேசிய பதிவேட்டின் இறுதி வெளியீட்டில் திருப்தியடையவில்லை எனில் அவர் 120 நாட்களுக்குள் வெளிநாட்டினர் தீர்ப்பாயத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
- குடிமக்கள் தேசிய பதிவேடு முதன் முதலில் அஸ்ஸாமில் 1951-ல் தயாரிக்கப்பட்டது மற்றும் தற்போது அது அஸ்ஸாம் மாநிலத்தில் மட்டுமே உள்ளது.
- 1985 ஆம் ஆண்டின் அஸ்ஸாம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தில் ஆகஸ்ட் 15, 1985-ல் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி முன்னிலையில் அகில அஸ்ஸாம் மாணவர்கள் சங்கம் (All Assam Students Union – AASU) மற்றும் அகில அஸ்ஸாம் கன சங்ரம் பரிசத் (All Assam Gana Sangram Parishad – AAGSP) ஒருபுறமாகவும், மாநில அரசாங்கம் மற்றும் மத்திய அரசாங்கம் மறுபுறமாகவும் கையொப்பமிட்டனர்.
- 2013-ல் குடிமக்கள் தேசிய பதிவேட்டை சீர்திருத்தி வெளியிடுவதற்கு உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில், குடிமக்கள் தேசிய பதிவேட்டின் முதல் பதிப்பு டிசம்பர் 31, 2017 நடுஇரவில் வெளியிடப்பட்டது.

❖ **மாநில செயலகத்திலுள்ள பணியாளர்களால் பனியன் மற்றும் ஜீன்ஸ் அணிவதை பீகார் மாநில அரசாங்கம் தடைவிதித்துள்ளது.**

- மாநில அரசாங்கம், அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பொருத்தமான, எளிமையான மற்றும் வசதியான உடைகளை அணிய வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.
- அதேபோல, கோவா மாநில அரசாங்கம் 2015 லும், ராஜஸ்தான் மாநில அரசாங்கம் ஜூன் 2018லும் மற்றும் தமிழ்நாடு அரசாங்கம் ஜூன் 2019 லும் இவ்வித ஆணைகளை பிறப்பித்துள்ளன.

❖ **மஹாராஷ்டிரா மாநிலத்தின் 34 மாவட்டங்களில் எல்லா காலநிலைத் தரங்களுக்கும் ஏற்றவாறு கிராமப்புற சாலைகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்துடன் $200 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) கையொப்பமிட்டுள்ளது.**

❖ **ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் ஜம்மு மற்றும் காஷ்மீர் உயர்நீதிமன்றம் என்ற ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தை பெறும்.**

- இந்த இரண்டு யூனியன் பிரதேசங்களும் அக்டோபர் 31, 2019 லிருந்து நடைமுறைக்கு வரவுள்ளன.
- மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கும் ஜம்மு மற்றும் காஷ்மீர் சீரமைப்பு சட்டம் 2019-க்கு ஆகஸ்ட் 9-ல் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஒப்புதலளித்தார்.

- மத்திய அரசாங்கம் ஆகஸ்ட் 5, 2019-ல் இந்திய அரசியலமைப்பின் விதி 370 ஐ ரத்துசெய்து ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில சிறப்பு அந்தஸ்தை எடுத்துவிட்டது.

❖ **ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கேலாட் செப்டம்பர் 13-ல் ஜன் சூச்னா இணையதள முகப்பு 2019 என்ற நாட்டிலேயே முதல் தகவல் இணையதள முகப்பை தொடங்கிவைத்தார்.**

- இந்த இணையதள முகப்பு பல்வேறு துறைகளின் தகவல்களை அளிக்கிறது மற்றும் 2005 ஆம் ஆண்டின் தகவலறியும் உரிமைச் சட்டத்தை சிறப்பாக அமுல்படுத்த உதவுகிறது.

❖ **உத்திரபிரதேச மாநில அரசாங்கம் செப்டம்பர் 13-ல் மாநில அமைச்சர்களின் வருமான வரியை அரசாங்கம் கொடுக்கும் என்ற சட்டத்தை எடுத்துவிடுவதற்கு தீர்மானித்துள்ளது.**

❖ **அஸ்ஸாமிற்கு பின்பு ஹரியானா முதலமைச்சர் மனோகர்லால் காட்டர், மாநிலத்தில் குடிமக்களின் தேசிய பதிவேடு அமுல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.**

❖ **டெல்லி காவல்த்துறை தனது குடிமக்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஒரு வசதியான 24x7 ஆன்லைன் வழியிலான பணிகளை ஏற்படுத்துவதற்கு 'டாட்பார் செயலியை'** (Tatpar App) **தொடங்கியுள்ளது.**

❖ **தெலுங்கானா மாநிலம் 2020 ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவு வருடம் என்று அறிவித்துள்ளது.**

❖ **ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB – PMJAY) வின் கீழ் பொன் அட்டைகளை மிக அதிக எண்ணிக்கையில் பங்கிடுவதற்கு வந்துள்ள முதலாவது மாநிலமாக ஜம்மு மற்றும் காஷ்மீர் உள்ளது.**

- இத்திட்டத்தின் படி, ஏழ்மையான மக்களுக்கு வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.5 லட்சத்திற்கான சுகாதார சிகிச்சையை உள்ளடக்குகிறது.

❖ **நாட்டின் தலைநகரிலுள்ள தெரு வியாபாரிகளுக்கான சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு 2014-ன் தெரு விற்பனை சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நாட்டில் முதன் முதல் முன்வந்துள்ள மாநிலம் டெல்லி ஆகும்.**

- இந்த சட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழுவிலும் 30 உறுப்பினர்கள் அடங்கிய 28 நகர விற்பனைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ **ஜம்மு மத்திய பல்கலைக்கழகம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆகிய இரண்டும் இணைந்து அந்த பகுதியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான கலாம் மையத்தை (Kalam Centre for Science and Technology – KCST) ஏற்படுத்துவதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.**

❖ **பிளாஸ்டிக் ஏற்றுமதியில் நாட்டின் மொத்த ஏற்றுமதியின் 45 சதவீதத்தை பெற்று குஜராத் முதலிடம் வகிக்கிறது.**

- இந்தியாவில் குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா ஆகிய இரு மாநிலங்கள் மட்டும் இந்தியாவின் 60 சதவீத பிளாஸ்டிக் ஏற்றுமதியை மேற்கொள்கின்றன.

தேசம்

❖ **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணையமைச்சர் (தனிபொறுப்பு) ஹர்தீப் பூரி என்பவரால், அங்கிகார்** (Angikaar) **என்ற மாற்ற மேலாண்மைக்கான ஒரு இயக்கம் தொடங்கப்பட்டது.**

- இந்த இயக்கம், பிரதமர் நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வைக்கிணங்க ஏவப்பட்டுள்ளது.
- கழிவு மேலாண்மை, நீர் மற்றும் சக்தி பாதுகாப்பு மரம் நடுதல் சுகாதாரம் மற்றும் சுத்தம் போன்றவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி சமூக குணநல மாற்றத்தைக் கொண்டு வருவதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.
- 150 வது வருட காந்தி பிறந்தநாளான அக்டோபர், 2019-ல் இவ்வித புதுத்திட்டம் எல்லா இலக்கு நகரங்களிலும் தொடங்கப்படும்.

❖ **மணாலியிலுள்ள ஒரு சுற்றுலா தளமான குலாபாபில் 9,000 அடி உயரத்தில் இந்தியாவின் மிக உயர்ந்தயிட சைக்கிளோட்டும் ட்ராக் கட்டப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளது.**

- நாட்டில் பேரிடர் நெகிழ்திறன் கட்டுமானத்திற்கான பன்னாட்டு கூட்டமைப்பை டெல்லியில் அதன் செயலக அலுவலகத்துடன் அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது.

❖ **2022 வாக்கில் அவசர மருத்துவ துறையை அனைத்து மருத்துவக் கல்லூரிகளும் கட்டாயம் பெற வேண்டும் என்பதை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

❖ **துணை ஜனாதிபதி எம்.வெங்கையா நாயுடு செப்டம்பர் 1, 2019-ல் தேசத்தின் மிக நீண்ட மின்மயமாக்கப்பட்ட இரயில் சுரங்கப்பாதையை தொடங்கி வைத்தார்.**

❖ **பிரதமர் நரேந்திரமோடி, தனது சிறப்பான தலைமைக்கும் மற்றும் சுவட்ச் பாரத் அபியானில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதற்கும் பில் மற்றும் மெலின்டா கேட்ஸ் நிறுவனத்தால் உலக இலக்கு விருது** (Global Goal Award) **வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்படவுள்ளார்.**

- பிரதமரின் விருப்பமான பலத் திட்டங்களில் ஒன்றான ஸ்வட்ச் பாரத் அபியான் என்ற திட்டம் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2, 2014-ல் தொடங்கப்பட்டது.
- இதன் முக்கிய நோக்கம், 2019 வாக்கில் திறந்த இடத்தில் மலம் கழிக்காத நிலையை இந்தியாவில் உருவாக்குவதாகும்.

❖ **வாரணாசியிலுள்ள சேவாபுரியில் 'டெர்ரக்கோட்டா க்ரைன்டர்'** (Terracotta Grinder) **எனப் பெயரிடப்பட்ட முதலாவது வினோதமான திட்டத்தை காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம்** (Khadi and Village Industries Commission) **தொடங்கியுள்ளது.**

- இந்த இயந்திரம், கழிவான மற்றும் உடைந்த மண்பாண்டங்களை பானை செய்வதில் மறுபயன்பாட்டிற்காக கடைந்தெடுக்கும்.

❖ **கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்கள் ராஜஸ்தான் மற்றும் ஹரியானா மாநிலங்களோடு அக்டோபர் 1லிருந்து குடும்ப அட்டை பரிமாற்றத் திட்டத்தின் ஒரு முன்மாதிரி திட்டத்தில் இணையவுள்ளன.**

❖ **பிரதம மந்திரி நரேந்திரமோடி செப்டம்பர் 7-ல் தனது நாக்பூர் விஜயத்தின் போது வணிகர்களுக்கான மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டமான பிரதான் மந்திரி லாகூ வியாபாரி மான் - தன் யோஜனா** (Pandhan Mantri Laghu Vyapari Maan Dhan Yojana Pension Scheme) **வை தொடங்கவுள்ளார்.**

- அவ்விழாவின் போது, நாட்டிலுள்ள முதன் முதல் பணம் செலுத்தியோரில் சிலருக்கு ஓய்வூதிய அட்டைகளை பிரதமர் வழங்குவார்.
- 18 முதல் 40 வயதிற்குள் இருக்கும் அனைத்து கடைக்காரர்கள், சுயவேலை செய்யும் நபர்கள் மற்றும் ரூ.1.5 கோடிக்குள் வியாபாரம் செய்யும் சிறுவியாபாரிகள் போன்றவர்கள் இத்திட்டத்தில் பதிவு செய்யலாம்.
- இத்திட்டத்தின்படி, தொடர்ந்து பணம்கட்டி 60 வயதை கடந்தவர்கள் மாதம் ரூ.3000 ஓய்வூதியமாக பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

❖ **மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் (MHRD), நாட்டிலுள்ள 5 உயர்கல்வி நிறுவனங்களை சிறப்பு நிறுவனங்களாக (Institutions of Eminence – IoE) அறிவித்துள்ளன.**

- அந்த 5 உயர்கல்வி நிறுவனங்கள் IIT சென்னை, பெனாரஸ் இந்து பல்கலைக்கழகம், IIT கராக்பூர், டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் ஹைதராபாத் பல்கலைக்கழகம் ஆகியவை ஆகும்.
- அதிகாரத்துவ நிபுணர் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் ஆகஸ்ட் 2, 2019-ல் பல்கலைக்கழக மானியக்குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- 2018-ல் 6 உயர்கல்வி நிறுவனங்களுக்கு சிறப்பு நிறுவன பட்டங்கள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாட்டிலுள்ள அமிர்தா விஷ்வ வித்யாபீடம் மற்றும் வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய இரண்டிற்கும் நோக்க கடித தலைப்பை மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வழங்கியுள்ளது.

❖ **சுகாதார அமைச்சர் ஹர்ஸ் வர்தன், "Eat Right India' மீதான சமூக மற்றும் ஊடக இயக்கத்துடனான 'POSHAN Maah 2019' ஐ தொடங்கி வைத்தார்.**

❖ **பிரதம மந்திரி நரேந்திரமோடி, செப்டம்பர் 7-ல் மஹாராஷ்டிராவின் ஹவுரங்கபாத்தில் நடக்கும் விழாவில், உஜ்வாலா எனப் பொதுவாக குறிப்பிடப்படுகின்ற அரசாங்கத்தின் முதன்மை திட்டமான பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனாவின் கீழ் 8 கோடி என்ற இணைப்பு எண்ணை வழங்கவுள்ளார்**

- இந்த திட்டம், உத்திரபிரதேசத்திலுள்ள பாலியாவில் மே 1, 2016-ல் தொடங்கப்பட்டது. மேலும், மார்ச் 2019 வாக்கில் 5 கோடி குடியிருப்புக்களை அடைவதற்கான இலக்குடன் இத்திட்டம் தொடங்கியது.
- மார்ச் 2020 வாக்கில் 8 கோடி குடியிருப்புகளை அடையும் இலக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ **ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் செப்டம்பர் 9 லிருந்து ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்லோவேனியா நாடுகளை பார்வையிடவுள்ளார்.**

❖ **மத்திய அரசு அடுத்த ஐந்தாண்டுகளில் முன்னுரிமை பாதுகாப்பிற்காக 130 ஈரநிலங்களை குறிப்பிட்டுள்ளது.**

- இவ்வித ஈரநிலங்கள் உத்திரபிரதேசம் (16), மத்தியபிரதேசம் (13), ஜம்மு மற்றும் காஷ்மீர் (12), குஜராத் (8), கர்நாடகா (7) மற்றும் மேற்குவங்கம் (6) ஆகிய மாநிலங்களில் உள்ளன.
- மேலும், ஈரநில சுகாதார அட்டை எனப்படும் ஒரு புதிய கருத்தும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

❖ **மத்திய அரசாங்கம், திரைப்பட பின்னனி பாடகி லதா மங்கேஷ்கர் வருகின்ற செப்டம்பர் 28-ல் 90 வயதை அடையும் போது, அவருக்கு 'தேசத்தின் மகள்'** (Daughter of the Nation) **என பெருமைப்படுத்த திட்டமிட்டுள்ளது.**

❖ **வெளிநாட்டு குற்றவாளிகள் மற்றும் தீர்ப்பாயங்களால் வெளிநாட்டினர் என அறிவிக்கப்பட்ட மக்கள் போன்றோரை காவலில் வைப்பதற்கு நாட்டின் மிகப்பெரிய காவல் மையம் அடுத்தவருட ஆரம்பத்தில் அஸ்ஸாமின் கோல்பாரா மாவட்டத்தில் வரவுள்ளது.**

❖ **கஞ்சா என்று பொதுவாக அறியப்படுகின்ற கண்ணாபீஸ், இதன்பிறகு உத்திரபிரதேசத்தின் லக்னோவிலும் மற்றும் உத்தரகாண்டின் பான்ட்நகரிலும் அமைந்துள்ள மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் மத்திய நிறுவனத்தில்** (Central Institude of Medicinal and Aromatic Plants – CIMAP) **வளர்க்கப்படும்.**

❖ **புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ராஷ்ரீய காமதேனு ஆயோக், பால் வளத்தைத் தவிர பசுக்களினால் உருவாகும் சாணம் மற்றும் கோமியம் போன்றவற்றை வணிகப்படுத்துதல் மீது, புதிய நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஆரம்ப முதலீட்டின் 60 சதவீதத்தை அரசு நிதியிலிருந்து பெறலாம் என்று அறிவித்துள்ளது.**

- இந்த ராஷ்ரீய காமதேனு ஆயோக் சென்ற பிப்ரவரியில் ரூ.500 கோடி ஆரம்ப நிதியுடன் பசு-அடிப்படையான தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்தில் தொடங்கப்பட்டது.

❖ **மதுராவில் தேசிய விலங்கு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் செயற்கைமுறை கருத்தரிப்புத் திட்டத்தை பிரதமர் நரேந்திரமோடி தொடங்கிவைத்தார்.**

- தேசிய விலங்குநோய் கட்டுப்பாட்டுத் திட்டம், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு வரும் பாதநோய் மற்றும் வாய்நோய் ஆகியவற்றைப் போக்கும் விதத்தில் 500 மில்லியன் கால்நடைகளுக்கு தடுப்பூசிப் போடபடும்.
- இத்திட்டத்திற்காக 2024 வரையான 5 வருடங்களுக்குரிய செலவு ரூ.12,652 கோடியை மத்திய அரசு வழங்குகிறது.

❖ **மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் என்பவர் இணை அமைச்சர் சஞ்சை டோத்ரே முன்னிலையில் 2019 ஆம் ஆண்டின் தேசிய மாணவர்கள் மற்றும் ஆசிரியர் துவக்க கொள்கையை தொடங்கி வைத்தார்.**

- அதற்கான கருத்துருக்களை சென்னை IIT பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா தலைமையிலான 15 உறுப்பினர்கள் கொண்ட குழு தயாரித்தது.

❖ **பிரதம மந்திரி நரேந்திரமோடி செப்டம்பர் 12-ல் ராஞ்சியில் விவசாயிகள் கடைக்காரர்கள் மற்றும் சுயவேலையிலுள்ள நபர்களுக்கான ஒரு விருப்பமுள்ள ஓய்வூதிய திட்டமான பிரதான் மந்திரி கிசான் மான்தன் யோஜனாவை தொடங்கி வைத்தார்.**

- மேலும், அவர் கடைக்காரர்கள் மற்றும் சிறுவியாபாரிகளுக்கான ஒரு ஓய்வூதிய திட்டமாக பிரதான் மந்திரி லாகூ வியாபாரி மான்தன் யோஜனாவையும் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டம் 60 வயது அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.3000 ஐ குறைந்தபட்ச ஓய்வூதியமாக பெறுவதற்கு வழிவகுக்கும்.
- தற்போது, 18 முதல் 40 வயதிற்குள் இருக்கும் விவசாயிகள் இந்தத் திட்டத்திற்காக விண்ணப்பிக்கலாம்.
- அதே நிகழ்வில் சுயவேலை பெற்றுள்ள நபர்களுக்கான சுயரோஜ்கார் என்ற ஓய்வூதியத் திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

- பிரதம மந்திரி தனது ஜார்கண்ட் விஜயத்தின் போது 462 ஏகல்வியா மாதிரி வசிப்பிட பள்ளிகளைத் தொடங்கி வைத்தார்.
- இவ்வித ஏகல்வியா பள்ளிகள் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பழங்குடியின மாணவர்களுக்கு இலவச கல்வியை வழங்கும்.

❖ **ஐரோப்பிய நாடுகள் உட்பட 100 நாடுகளுக்கும் அதிகமாக இந்தியா தனது சொந்த BIS தரங்களில் குண்டு துளைக்காத சட்டைகளை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது.**

- மேதனியிலுள்ள 2 பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சென்னையிலுள்ள ஆவடி தளவாடத் தொழிற்சாலை மற்றும் தனியார் நிறுவனங்களான பால்வாலிலுள்ள SNPP, பாரிதாபாத்திலுள்ள Starwire, கான்பூரிலுள்ள MKU போன்ற நிறுவனங்கள் BIS தரங்களின்படி குண்டு துளைக்காத சட்டைகளைத் தயாரிக்கின்றன.

❖ **பிரதமர் நரேந்திரமோடி செப்டம்பர் 11-ல் மதுராவில் ஸ்வாச்டா ஹி சேவா – 2019 என்ற விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.**

- இதன் மையக்கருத்து "நெகிழி கழிவு விழிப்புணர்வு மற்றும் மேலாண்மை"
- தேசிய அளவில் நெகிழி கழிவுகள் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி சுத்தத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- வருகின்ற தீபாவளி நாளான அக்டோபர் 27, 2019க்கு முன்பு எல்லாவித நெகிழி கழிவுகளை போக்கிவிட வேண்டும்.
- தேசதந்தை மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளான வரும் அக்டோபர் 2, 2019-ல் இந்த விழிப்புணர்வு இயக்கம் முடிவடையும்.
- இந்த இயக்கம், மத்திய அரசாங்கத்தின் கால்நடை மற்றும் பால்வளத்துறை மற்றும் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறையுடன் உத்திரபிரதேச மாநில அரசாங்கம் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.

❖ **டெல்லியிலுள்ள இந்திராகாந்தி பன்னாட்டு விமான நிலையத்தில் சமீபத்தில் இந்தியாவின் மிக உயர்ந்த வான் போக்குவரத்து கட்டுப்பாட்டு கோபுரம் தொடங்கப்பட்டது.**

❖ **உலக எதிர்-உயிரியல் எதிர்ப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு மையத்தின் ஒரு உறுப்பினராக சமீபத்தில் இந்தியா வந்துள்ளது.**

- தற்போது இந்த மையத்தில் 16 உறுப்பு நாடுகள் உள்ளன.
- இந்த மையம் மே 2018-ல் தொடங்கப்பட்டது.

❖ **கொல்கத்தாவில் இந்தியாவின் முதலாவது தேசிய எதிர் உயிரியல் எதிர்ப்பு மையம் தொடங்கப்படவுள்ளது.**

❖ **மின்னணு சிகரெட்டுகளின் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இருப்பு வைத்தல், போக்குவரத்து, விற்பனை மற்றும் விளம்பரங்கள் மீதான தடையை மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.**

- இதை மீறுவோர்களுக்கு 1 வருடத்திலிருந்து 3 வருடங்கள் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூபாய் 1 லட்சத்திலிருந்து ரூபாய் 5 லட்சம் வரை தண்டமும் விதிக்கப்படும்.

❖ **ராஜ்நாத் சிங், பெங்களூரிலுள்ள இணை விமானி பயிற்சியின் போது** Indigenous Light Combat Aircraft – LCA) **தேஜாஸில் பறக்கும் நாட்டின் முதல் பாதுகாப்பு அமைச்சராக வந்துள்ளார்.**

❖ **159 வருட வரலாற்றுப் பாரம்பரியமிக்க காட்சிக்காக ஹிமாச்சலப் பிரதேசத்தில் ஒரு அருங்காட்சியகத்தை இந்திய கணக்காயர் மற்றும் தணிக்கையாளர்** (CAG) **கட்டிக் கொண்டிருக்கிறார்.**

❖ **உச்சநீதிமன்றம் அக்டோபர் 1லிருந்து ஒரு நிரந்தரமான 5 நீதிபதி அரசியலமைப்பு அமர்வை உருவாக்கவுள்ளது.**

- இந்த புதிய அமர்வு, அரசியலமைப்பு தொடர்புடைய கேள்விகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்பளிக்கும் மற்றும் சட்டங்களுக்கு விளக்கம் கூறும்.

❖ **நாட்டிலுள்ள மத்திய அரசால் நிதியளிக்கப்படும் 158 உயர்கல்வி நிறுவனங்களில் பொதுப்பிரிவில் பொருளாதார ரீதியாக நலிவடைந்தோருக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்துவதற்காக ரூ.4315.15 கோடியை கூடுதல் தொகையாக மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.**

❖ **சமூகநீதி மற்றும் அதிகாரத்துவத்துக்கான மத்திய அமைச்சர் தாவார்சந்த் கேலாட் செப்டம்பர் 18-ல் புதுடெல்லியில் ஒரு மேலாண்மை தகவல் முறைமையை** (Management Information System – MIS) **தொடங்கி வைத்தார்.**

- இவ்வசதி ஊனமுற்ற அனைத்து நபர்களுக்கும் முழுமையாக கிடைக்கும்.
- ஊனமுற்ற மக்களின் பன்னாட்டு தின நிகழ்வின் போது டிசம்பர் 3, 2015-ல் 'அணுகக்கூடிய இந்திய இயக்கம்' (Accessible India Campaign) பிரதமர் நரேந்திரமோடியால் தொடங்கப்பட்டது.
- தேசம் தழுவிய 'அணுகக்கூடிய இந்திய இயக்கம்' என்பது சுகம்யா பாரத் அபியான் (Sugamya Bharat Abhiyan) என்றும் அறியப்படுகிறது.
- இது, ஊனமுற்றோரின் பல்வேறு சாதனைகளுக்காக தொடங்கப்பட்டுள்ளது.

❖ **பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 23-ல் நியூயார்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் காலநிலை செயல்பாடு உச்சிமாநாட்டில் உரையாற்றினார்.**

❖ **மத்திய உள்துறை அமைச்சர் அமிக்ஷா குடிமக்களுக்கான ஒரு தனிப்பட்ட பல்நோக்கு அடையாள அட்டையின் கருத்தை முன்மொழிந்துள்ளார்.**

❖ **பிரதமர் நரேந்திரமோடி செப்டம்பர் 24-ல் நியூயார்க்கில் ஐ.நாவின் தலைமை இடத்திலுள்ள "காந்தி சூரியஒளி பூங்காவில்" டாலர் 1 மில்லியனுக்கான 50 கி.வா திறனை தொடங்கி வைத்தார்.**

❖ **லாங் தீவின் ஓல்டு வெஸ்பெரியிலுள்ள பல்கலைக்கழக வளாகத்தில் 150 மரங்களை கொண்ட காந்தி அமைதி தோட்டத்தை இந்தியா பரிசளித்தது.**

❖ **பிரதமர் நரேந்திர மோடி, பசுபிக் தீவு நாடுகளின் குழுவிற்கு அமெரிக்க டாலர் 150 மில்லியனுக்கான கடனை அறிவித்துள்ளார்.**

❖ **காஷ்மீரின் புகழடைந்த குங்குமப்பூவிற்கு புவியியல் குறியீடு சான்று இறுதியாக வழங்கப்பட்டுள்ளது.**

❖ **மத்திய அரசு 'ஒரு நாடு ஒரு குறிச்சொல்' என்ற திட்டத்தை துவக்கவுள்ளது.**

❖ **இந்தியா, வரும் செப்டம்பர் 28 மற்றும் 29-ல் சென்னை IIT –ல் சிங்கப்பூர் உடனான இரண்டாவது கூட்டு ஹேக்கதானை (Joint Hackathon) நடத்தவுள்ளது.**

- 'சிங்கப்பூர் - இந்திய ஹேக்கதான் 2019' –ன் வெற்றியாளர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி விருது வழங்குவார்.

- இது முயற்சி, இருநாட்டு மாணவர்களின் ஒத்துழைப்பை வளர்க்கவும் மற்றும் அவர்கள் சமுதாயத்தில் சந்திக்கிற பிரச்சனைகளுக்கு தீர்வுகாணவும் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்தியாவிலிருந்து மூன்று அணிகள் மற்றும் சிங்கப்பூரிலிருந்து மூன்று அணிகள் அடங்கிய மொத்தம் 20 அணிகள் இதில் பங்கேற்கவுள்ளன.
- ஓவ்வொரு அணியிலும் 6 உறுப்பினர்கள் இடம் பெறுவர்.
- அவர்கள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ள பல்வேறு விதமான பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் பணிபுரிவர்.

❖ **லாரிகள் மற்றும் பேருந்துகளை உள்ளடக்கிய வர்த்தக வாகனங்களுக்கான ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக குறைந்தபட்ச கல்வித் தகுதியை போக்குவரத்து அமைச்சகம் விளக்கிக் கொண்டது.**

- முன்னர், வர்த்தக வாகன உரிமம் பெறுவதற்கு மத்திய அரசின் மோட்டார் வாகன விதிமுறைகள் பிரிவு 8-ன் படி, குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- தற்போது, இந்த குறைந்தபட்ச கல்வித் தகுதி நீக்கப்பட்டு விட்டது.
- இது, செப்டம்பர் 30 லிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது.

❖ **வருமான வரித்துறை ஆதாருடன் நிரந்தர கணக்கு எண்ணை (PAN) இணைப்பதற்கு மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.**

- அதாவது செப்டம்பர் 30-லிருந்து டிசம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

❖ **சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கான மத்திய அமைச்சர் டாக்டர் ஹர்ஸ்வர்தன், நாட்டில் 'TB Harega Desh Jeetega Campaign' என்ற ஒரு புதிய இயக்கத்தை சமீபத்தில் தொடங்கி வைத்தார்.**

- இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவிலிருந்து காசநோயை முழுவதுமாக ஒழிப்பதாகும்.
- இதற்காக 25 தேசிய காசநோய் நிகழ்வு ஆய்வு வேன்களை தொடங்கி வைத்தார்.
- இந்த ஆய்வின் மூலம் நாட்டில் நிகழும் காசநோய் பற்றிய தகவல்களை முழுமையாக திரட்ட முடியும்.

குழுக்கள்

❖ **சில குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களால் முறையற்ற பட்டங்கள் விற்கப்படும் குற்றங்களை கண்டறிவதற்கு 5 உறுப்பினர் கொண்ட ஒரு குழுவை பல்கலைக்கழக மானியக்குழு அமைத்துள்ளது.**

- இந்த குழுவிற்கு டி.பி.சிங் தலைவராகவும் மற்றும் பல்கலைகழக மானியக்குழுவின் இணைச்செயலர் சுரேந்திரசிங் துணைத்தலைவராகவும் செயல்படுவார்.

❖ **ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய யூனியன் பிரதேசங்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆய்வு செய்வதற்கு அமைச்சர்களின் 5 உறுப்பினர் குழுவை (Group of Ministers – GoM) மத்திய அரசாங்கம் அமைத்துள்ளது.**

- இந்தக் குழுவில் மத்திய அமைச்சர்கள் ரவிசங்கர் பிரசாத், ஜித்தேந்திர சிங், தாவார்சன்ந் கேளாட், நரேந்திர சிங் தோமர் மற்றும் தர்மேந்திர பிரதான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
- இந்தக்குழு, அங்கு நிலவும் பிரச்சனைகளை ஆய்ந்து பரிந்துரை சமர்பிக்கும்.

- 2019 ஆம் ஆண்டின் ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின்படி, ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களும் அக்டோபர் 31, 2019 லிருந்து நடைமுறைக்கு வரவுள்ளன.

❖ **பி.ஜே.பி எம்.பிக்களான ஜயந்த் சிங்ஹா மற்றும் பி.பி.சௌத்ரி ஆகிய இருவரும் 17வது மக்களவையிலுள்ள முறையே நிதி மற்றும் வெளி விவகாரங்கள் மீதான பாராளுமன்ற நிலைக்குழுக்களின் தலைமை வகிக்கவுள்ளனர்.**

❖ **இரண்டு யூனியன் பிரதேசங்களாக ஜம்மு மற்றும் காஷ்மீரை பிரித்ததன் அமுலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்கு மத்திய அரசாங்கத்தால் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.**

- இந்த குழுவிற்கு முன்னாள் பாதுகாப்பு செயளர் சஞ்சை மித்ரா தலைவராக செயல்படுவார்.
- உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அலுவலர் அருண் கோயல் மற்றும் ஓய்வு பெற்ற இந்திய சிவில் கணக்குகள் பணி அலுவலர் கிரிராஜ் பிரசாத் ஆகியோர் இருப்பார்கள்.
- ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்கள் அக்டோபர் 31-ல் நடைமுறைக்கு வரும்.
- ஆகஸ்ட் 2019-ல் இந்திய பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா 2019 அம்மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்தது.

பொருளாதாரம்

❖ **2019 ஆம் ஆண்டின் 2வது காலாண்டில் 31.7 சதவீத சந்தைப் பங்குடன் தொலைதூரத் தகவல் சந்தையில் ரிலையன்ஸ் ஜியோ முதலிடத்தில் உள்ளது.**

❖ **உலகின் மிகச்சிறந்த மற்றும் மிகவும் பழமையான சுற்றுலா நிறுவனங்களில் ஒன்றான தாமஸ் குக் திவாலானது.**

- தாமஸ் குக்கின் இறுதி விமானம் செப்டம்பர் 23-ல் மான்செஸ்டர் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

பன்னாடு

❖ **ஒரு முன்மாதிரி திட்டத்தின் பகுதியாக தரைப்பகுதியின் வெப்பநிலையை குளிர் படுத்துவதற்காக இதயபிரதிபலிப்பு நிறமான நீள நிறத்தை தலைநகர் தோகாவிலுள்ள சாலைகளில் கத்தாரின் பொதுப்பணிகள் ஆணையம் வர்ணம் பூசியுள்ளது.**

❖ **1997 வரை பிரிட்டிஸ் காலனியாக இருந்த ஹாங்காங் "ஒரு நாடு இரு முறைமைகள்" என்ற கொள்கை அடிப்படையில் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தக்கொள்கை, ஹாங்காங்கை சீனாவின் ஒரு பகுதியாக மாற்றியது. ஆனால் குடியுரிமை, சுதந்திரம், கூட்டம் போன்றவை மறுக்கப்பட்டன.**

❖ **சென்ற ஏப்ரல் மாதத்தில் குற்றம் புரிவோர் என்று சந்தேகிக்கப்படுபவர்களை சீனாவிற்கு நாடு கடத்தும் முன்மொழிவு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், ஜூன் மாதத்தில் ஹாங்காங் தலைவர் கேரி லேம்மால் அது நிறுத்தி வைக்கப்பட்டது.**

❖ **ஹாங்காங் தலைமை நிர்வாகி கேரி லேம் கடந்த மூன்று மாதங்களில் போராட்டத்திற்கு வழிவகுத்த நாடுகடத்தும் மசோதாவை முறைப்படி அரசாங்கம் விளக்கிக் கொள்ளும் என்று அறிவித்தார்.**

❖ **ஜுன் மாதத்திற்கான உலகின் முதலாவது ஏற்றுமதி நாடு என்பதிலிருந்து சவுதி அரேபியாவை அமெரிக்கா கீழ் இறக்கியது.**

❖ **ஸ்ரீலங்கா செப்டம்பர் 16-ல் 'தாமரைக் கோபுரம்' எனப் பெயரிடப்பட்ட தெற்காசியாவின் மிக உயர்ந்த கோபுரத்தைத் தொடங்கியுள்ளது.**

- இந்த கோபுரத்தைக் கட்டுவதற்கான செலவு $104.3 மில்லியன் ஆகும்.
- இதில் 80 சதவீத நிதியை பெல்ட் அன்டு ரோடு திட்டத்தின் கீழ் சீனா வழங்கியுள்ளது.
- 350 மீ உயரமுள்ள 17 அடுக்கு தாமரைக் கோபுரம் கொலும்பில் அமைந்துள்ளது.

❖ **மின்னணு சிகரெட்டுகளைத் தடைசெய்யும் இரண்டாவது அமெரிக்க மாநிலமாக நியூயார்க் வந்துள்ளது.**

- ஏற்கனவே, முதன்முதலாக அமெரிக்காவில் மின்னணு சிகரெட்டுகள் மீதான தடையை மிச்சிகன் மாநிலம் நடைமுறைப்படுத்தியது.

❖ **சீனாவுடனான தைவானின் பதட்டங்களைத் தொடர்ந்து, தைவான் மற்றும் க்ரிபாட்டி ஆகிய இரு நாடுகளும் தங்களது ராஜாங்க உறவுகளை முடித்துக் கொண்டன.**

❖ **அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்சில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் பெடாரி கருணை நிறுவனம் என்பது முதன் முதலில் தொடங்கப்பட்டது.**

- இதற்கு முன்பு, விஸ்கான்சின் பல்கலைக்கழகம் ஆரோக்கிய மனத்திற்கான மையத்தை தொடங்கியுள்ளது.

❖ **முதல் முறையாக சவுதி அரேபிய அரசாங்கம் 49 நாடுகளின் குடிமக்களுக்காக ஆன்லைன் சுற்றுலா விசாக்களுக்கான விண்ணப்பங்களை திறந்துள்ளது.**

- மற்ற நாடுகளில் உள்ளோர் இந்நாட்டு சுற்றுலா விசாக்களுக்காக தூதரகங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

நியமனங்கள்

❖ **பணமோசடியை தடுக்கும் சட்ட** (Prevention of Money Laundering Act – PMLA) **மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக சுனில் கௌர் நியமிக்கப்பட்டுள்ளார்.**

- இவர் டெல்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஆவார்.
- பணமோசடி தடுப்புச்சட்டம் 2002-ல் இயற்றப்பட்டது. ஆனால், அதனுடைய விதிமுறைகள் அனைத்தும் ஜுலை 1, 2005-ல் நடைமுறைக்கு வந்தது.

❖ **ஜனாதிபதி ராம்நாத்கோவிந் தெலுங்கானா, கேரளா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் ஹிமாச்சல பிரதேசம் ஆகிய 5 மாநிலங்களுக்கான புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்.**

- 2014 லிருந்து தமிழ்நாடு பிஜேபி யின் தலைவரும் மற்றும் காங்கிரஸ் கட்சியின் முதுபெரும் தலைவர் குமரி ஆனந்தனின் மகளுமான 58 வயதுடைய தமிழிசை சௌந்தரராஜன் என்பவர் தெலுங்கானா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கால்ராஜ் மிஸ்ரா ராஜஸ்தானுக்கும், பகத்சிங் கோசியாரி மகாராஷ்டிராவுக்கும், பண்டாரு டட்டாத்ரேயா ஹிமாச்சல பிரதேசத்திற்கும் மற்றும் ஆரிப் முகமதுகான் கேரளாவிற்கும் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ **சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி வி.கே.தகில்ரமனியின் இடத்தில் மேகாலயா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அஜய்குமார் மித்தல் இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.**

- ஒரு பெரிய மற்றும் பழமையான உயர் நீதிமன்றத்திலிருந்து மிகச்சிறிய மற்றும் இளமையான உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதி இடமாற்றம் என்பது இதுவே முதல்முறையாகும்.
- சென்னை உயர்நீதிமன்றம் விக்டோரியா அரசியாரின் ஆணைப்படி 1862-ல் அமைக்கப்பட்டது.
- சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 75, ஆனால் தற்போது 57 நீதிபதிகள் உள்ளனர்.
- இதற்கு மாறாக, மேகாலயா உயர்நீதிமன்றம் மார்ச் 2013-ல் உருவாக்கப்பட்டது மற்றும் அதன் மொத்த நீதிபதிகள் மூவர் மட்டுமே. தற்போது தலைமை நீதிபதியை உள்ளடக்கி மொத்தம் 2 நீதிபதிகளே உள்ளன.
- நீதிபதி வி.கே.தகில்ரமனி ஜுன் 2001-ல் பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் சென்னை உயர்நிதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஆகஸ்ட் 2010-ல் பதவியேற்றார்.
- தற்போது, மேகாலயா மாநில உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அஜய்குமார் மித்தல் பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிபதியாக இருந்து பின்னர் மே 2019-ல் அவர் தலைமை நீதிபதியாக மேகாலயா சென்றார்.

❖ **லெப்டினன் ஜென்ரல் மனோஜ் முகுந் நரவாணி என்பவர் செப்டம்பர் 1-ல் இராணுவத்தின் துணைத்தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.**

- தற்போதைய இராணுவ தலைவர் ஜென்ரல் டிப்பின் ரவாக் வரும் டிசம்பர் 31-ல் ஓய்வு பெறுவதை அடுத்து நரவாணி அப்பதவி ஏற்கவுள்ளார்.

❖ **தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா செப்டம்பர் 3-ல் உலகத் தேர்தல் அமைப்புகள் கழகத்தின்** (Association of World Election Bodies – AWEB) **தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.**

- இந்தப் பொறுப்பில் ரோமானிய நாட்டவர் இருந்தார். தற்போது, இந்தியா 2019 லிருந்து 21 வரை அப்பொறுப்பை பெற்றுள்ளது.
- பெங்களூரில் நடைபெற்ற உலக தேர்தல் அமைப்புகள் கழகத்தின் (AWEB) பொதுச்சபை கூட்டத்தில் 45 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

❖ **பழம்பெரும் அரசியல்வாதியும் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஆரிப் முகமத் கான் செப்டம்பர் 6-ல் கேரளாவின் 22வது ஆளுநராக பதவியேற்றார்.**

❖ **முன்னாள் தமிழ்நாடு பி.ஜே.பி தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன், செப்டம்பர் 8-ல் ஹைதராபாத்திலுள்ள ராஜ்பவனில் தெலுங்கானா மாநில ஆளுநராக பதவி ஏற்றுக்கொண்டார்.**

- அவருக்கு தெலுங்கானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ராகவேந்திர சிங் சௌகான் பதவிப் பிரமாணம் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.
- அப்போது தெலுங்கானா முதலமைச்சர் கே.சந்திரசேகரராவ் உடனிருந்தார்.

❖ **அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப், ப்ளாரிடாவிலுள்ள இந்திய – அமெரிக்க சர்கியூட் நீதிமன்றத்தில் ஒரு .ஃபெடரல் நீதிபதியாக அணுராக் சிங்காலை நியமித்துள்ளார்.**

❖ **பிரதமருக்கான கூடுதல் முதன்மை செயலராக இருந்த பி.கே.மிஸ்ரா என்பவர் பிரதமருக்கான புதிய முதன்மை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **ஓய்வுபெற்ற லெடினட் ஜெனரல் அப்ஹிஜித் குஹா என்பவர் ஏமன் ஹொடைடாவிலுள்ள ஐ.நா முகாமின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **முன்னாள் கிரிக்கெட் உலகக் கோப்பை வென்ற கேப்டன் கபில் தேவ் என்பவர் ஹரியானா மாநிலத்தின் சோனிப்பேட் மாவட்டத்தின் ராய் நகரிலுள்ள ஹரியானா விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தராக அறிவிக்கப்பட்டுள்ளார்.**

- விளையாட்டு தொடர்பான இந்த பல்கலைக்கழகம் இந்தியாவில் மூன்றாவதாக ஏற்படுத்தப்பட்டதாகும்.
- இதற்கு முன்பு, குஜராத்திலுள்ள காந்தி நகரில் ஸ்வர்னிம் குஜராத் விளையாட்டுப் பல்கலைக்கழகமும், சென்னையில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமும் அமைக்கப்பட்டுள்ளன.

❖ **நீதிபதிகள் வீ.ராமசுப்பிரமணியன், கிருஷ்ணாமுராரி, எஸ்.ரவீந்திரபாட் மற்றும் ரிசிகேஸ் ராய் ஆகிய நால்வரையும் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நியமனம் செய்துள்ளார்.**

- இந்த நான்கு நீதிபதிகளும் செப்டம்பர் 23-ல் பதவி ஏற்றப் பிறகு உச்சநீதிமன்றத்தின் முழுபல எண்ணிக்கை 34 ஆகிவிடும்.
- நீதிபதி ராமசுப்பிரமணியன் சிறந்த அறிஞர் மற்றும் பலசிக்கலான வழங்குகளில் சிறப்பான தீர்ப்புகளை வழங்கியவர்.
- இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இவர் தற்போது ஹிமாச்சல பிரதேச உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக உள்ளார்.
- தலைமை நீதிபதி ரஞ்சன் கோஹாய் பதவிக்காலத்தில் உச்சநீதிமன்றம் முழுபல எண்ணிக்கையை எட்டியிருப்பது இது இரண்டாவது முறையாகும்.

❖ **ஏர் மார்சல் ராக்கேஷ் குமார் சிங் பதோரியா நாட்டின் 26வது விமானப்படைத் தலைவராக பதவி ஏற்கவுள்ளார்.**

- தற்போதுள்ள விமானப்படைத் தலைவர் ஏர்சீப்மார்சல் பீரேந்தர்சிங் தனோவா செப்டம்பர் 30-ல் ஓய்வு பெறுவதை அடுத்து, பதோரியா அப்பதவி ஏற்கவுள்ளார்.

❖ **உச்சநீதிமன்ற கலீஜியம், குஜராத் உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான ஏஏ குரேஷியை திரிபுரா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பரிந்துரை செய்துள்ளது.**

❖ **காங்கிரஸ் தலைவரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருமான சசி தடூர் என்பவர் வெளிவிவகாரங்கள் மீதான பாராளுமன்ற நிலைக்குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **தரைப்படையின் தலைவரான ஜெனரல் பிபின் ராவட் முப்படைத் தலைவர்கள் பணியாளர் குழுவின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.**

- செப்டம்பர் 30-ல் பணிஓய்வு பெறும் விமானப்படைத் தலைவர் ஏர் சீப் மார்சல் பி.எஸ்.தனோவா செப்டம்பர் 28-ல் பதவிக்கோலை பிபின் ரவாத்திடம் ஒப்படைத்தார்.
- ஏர் மார்சல் ஆர்.கே.எஸ். பதோரியா விமானப்படைத் தலைவராக பதவிஏற்கவுள்ளார்.
- பிரதமர் நரேந்திரமோடி கடந்த தனது சுதந்திர உரையில் முப்படைத்தலைவர்கள் அடங்கிய குழுவை (CDS) அமைப்பதாக அறிவித்தார்.
- இந்த அறிவிப்பு இராணுவத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவும் மற்றும் முப்படைகளை ஒருங்கிணைக்கவும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ **பல்கேரியாவின் கிரிஸ்டாலினா ஜார்ஜிவா என்ற பெண் சமீபத்தில் பன்னாட்டு பணநிதியின் (IMF) புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.**

- இவர் ஏற்கனவே உலக வங்கியின் தலைமைச் செயல் அலுவலராக பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **நீதிபதி ராஜேந்திரமேனன் என்பவர் ஆயுதப்படை தீர்ப்பாயத்தின்** (Armed Forces Tribunal – AFT) **அடுத்த தலைவராக செயல்படவுள்ளார்.**

- அவருடைய பெயர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன்கோஹாயால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- நீதிபதி ராஜேந்திரமேனன் டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாவார்.
- ஆயுதப்படை தீர்ப்பாயத்தின் தலைவர் நீதிபதி வீரேந்திரசிங் வரும் அக்டோபர் 6-ல் ஓய்வு பெறவுள்ளார்.
- ஆயுதப்படைகள் தீர்ப்பாயச்சட்டம் 2007-ன்படி, புதுடெல்லியில் 2009-ல் ஆயுதப்படைகள் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டது.

விருதுகள்

❖ **யோகாவின் மேம்பாட்டில் சிறந்த பங்களிப்பிற்கான 2019 ஆம் ஆண்டின் தேசிய யோகா விருதுகளை பிரதமர் நரேந்திரமோடி வழங்கினார்.**

- 2019 ஆம் ஆண்டின் பன்னாட்டு யோகா தினத்தன்று வெற்றியாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.
    - முங்கரிலுள்ள யோகாவின் பீகார் பள்ளி (தேசிய பிரிவு)
    - வாழ்வு திட்டத்தின் சுவாமி ராஜரிஷி முனி (தனிப் பிரிவு)
    - ஜப்பான் யோகா நிகேதன் (பன்னாட்டு பிரிவு)
    - இத்தாலியிலுள்ள ஆண்டோனியட்டா (தனி – பன்னாட்டு பிரிவு)
- 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய யோகா விருது வெற்றியாளர்கள்
    - நாசிக்கிலுள்ள விஸ்வாஸ் மண்டலிக் (தனி - தேசிய பிரிவு)
    - மும்பை யோகா நிறுவனம் (அமைப்பு – தேசிய பிரிவு)

❖ **தெற்கு சூடானிலுள்ள ஐ.நா முகாமில் சிறப்பான பணிகளை செய்ததற்காக 5 இந்திய பெண் காவல் அலுவலர்களை ஐக்கிய நாடுகள் சபை கௌரவப்படுத்தியுள்ளது.**

- அந்த 5 அலுவலர்கள் மஹாராஷ்டிரா காவல்துறையை சேர்ந்த டி.எஸ்.பி கோபிகா ஜஹகிர்தா, சண்டிகர் காவல் துறையின் ஆய்வாளர் ரீனா யாதவ் உள்துறை அமைச்சகத்தின் ஆய்வாளர் ராகினி குமாரி, உள்துறை அமைச்சகத்தின் டி.எஸ்.பி பாரதி சாமன்ந்த்ராய் மற்றும் ராஜஸ்தான் காவல்துறையின் ஏ.எஸ்.பி கம்மல் ஜெகாவர்த் ஆகியோர் ஆவர்.

❖ **India's 'Yogi of the Racetrack' – has won 'Best Video' award for the Asia & Pacific Region in the UNWTO Tourism Video Competition 2019.**

❖ **மேகாலயா அடிப்படையான உரிமைகள் ஆர்வலர் ஆக்னஸ் காஸ்சிலிங் மற்றும் ஆண்கள் வன்முறைக்கெதிரான துருக்கிய ஆர்வலர் நெபாஹட் அக்கோக் ஆகிய இருவரும் இணைந்து 11வது பன்னாட்டு கிரான்ட் டிங் விருதைப் பெற்றுக் கொண்டனர்.**

❖ **2019 –ன் டாக்டர் கலாம் ஸ்மிருத்தி பன்னாட்டு சீர்மிகும் விருது வங்காள தேச பிரதமர் செயிக் ஹசினாவிற்கு வழங்கப்பட்டது.**

❖ **ரன்வீர்சிங்கின் ஆர்வலத்தை உள்ளடக்கும் ஜோயா அக்தரின் 'கல்லி பாய்' என்ற திரைப்படம் இந்த வருட 92வது ஆஸ்கார் விருதுகளுக்கான விழாவின் பன்னாட்டு திரைப்படப் பிரிவில் இந்தியாவின் அலுவலக நுழைவாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.**

❖ **ஒரு உத்தரகாண்ட் மாநில விவசாயின் வாழ்க்கை மீதான ஆவண அடிப்படையிலான 'மோட்டி பேக்' ஆஸ்கார் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.**

- இந்த ஆவணப்படம் நிர்மல் சந்தரால் இயக்கப்பட்டுள்ளது.

❖ **மெகா ஸ்டார் அமிதாப் பச்சன், இந்திய திரைப்படத் தொழிலுக்கு தனது பங்களிப்பிற்கான 2018 – ம் வருட தாதாசாகிப் பால்கே விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.**

❖ **ராஜஸ்தான் மாநிலத்தின் ஆழ்வார் மாவட்டத்தைச் சேர்ந்த 17 வயது பெண்ணான பாயால் ஜாங்கிட், நியூயார்க்கில் நடைபெற்ற 2019-ன் கோல்கீப்பர்கள் உலக கோல்கள் விருதுகளில் மாற்றம் ஏற்படுத்துபவர் விருதைப் (Changemakker Award) பெறும் முதல் இந்தியராக வந்துள்ளார்.**

- பாயல், தனது சொந்த மாவட்டமான கின்சாவில் நடக்கும் குழந்தை திருமண நடைமுறையை ஒலிப்பதற்காக மிகுந்த முயற்சி மேற்கொண்டவர் என அறியப்பட்டுள்ளார்.
- அவர், குழந்தைகளின் பாராளுமன்றம் என்கின்ற பாலபஞ்சாயத்தின் தலைவராக கின்சா மாவட்டத்தில் உள்ளார்.

❖ **மத்திய அரசாங்கம், இந்தியாவின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் பங்களிப்பிற்கான உயர்ந்தபட்ச சிவிலியன் விருதான சர்தார் பட்டேல் தேசிய ஒருமைப்பாட்டு விருதை ஏற்படுத்தியுள்ளது.**

- இவ்விருது, சர்தார் பட்டேலின் பிறந்தநாள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு தினமான அக்டோபர் 31-ல் அறிவிக்கப்படும்.
- இவ்விருது, ராஷ்டிரபதி பவனின் இந்திய ஜனாதிபதி பத்ம விருதுகளை வழங்குகின்ற போது அளிக்கப்படும்.
- இவ்விருதுக்கு பரிசு பணம் இல்லை. ஆனால் ஒரு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேலும், ஒவ்வொரு வருடத்திற்கும் மூன்று விருதுகள் வரை வழங்கப்படும்.
- விருதுகள் குழு பிரதம மந்திரியால் அமைக்கப்படும். இக்குழுவில், ஜனாதிபதிக்கான செயலர், பிரதமருக்கான முதன்மைச் செயலர், காபினெட் செயலர் மற்றும் உள்துறைச் செயலர் மற்றும் பிரதம மந்திரியால் தேர்வு செய்யப்படும் மூன்றிலிருந்து நான்கு வரையான சிறப்பு நிபுணத்துவம் பெற்றவர்கள் உறுப்பினர்களாக இடம் பெறுவர்.

❖ **இந்தியாவின் முன்னாள் தடகள வீராங்கனை மற்றும் ஒலிம்பிக் விளையாட்டாளர் பி.டி.உஷாவிற்கு, பெருமைக்குரிய தடகள கூட்டமைப்பின் பன்னாட்டு சங்க (International Association of Athletics Federation – IAAF) வெட்ரன் பின் விருது வழங்கப்பட்டுள்ளது.**

- இந்த பெருமைமிகு விருதை செப்டம்பர் 24-ல் கத்தாரில் நடைபெற்ற IAAF ன் 52 வது காங்கிரஸ் கூட்டம் முடிவு செய்தது.
- 1984-ல் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக்கின் 400மீ தடகள இறுதிப்போட்டியில் இவர் நான்காவதாக வந்தார்.
- இவர் 1986-ல் சியோலில் நடைபெற்ற ஆசிய விளையாட்டில் 200மீ, 400மீ மற்றும் 400மீ தடகளத்தில் வென்றுள்ளார்.
- இவர் 1985-ல் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டில் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- இவர் 1983-ல் அர்ஜுனா விருதையும் மற்றும் 1985-ல் பத்மஸ்ரீ விருதையும் பெற்றுள்ளார்.

❖ **துணை ஜனாதிபதி எம்.வெங்கையா நாயுடு தெலுங்கு கவிஞர் டாக்டர் கே. சிவாரெட்டிக்கு 28வது சரஸ்வதி சம்மன் விருதை வழங்கினார்.**

- 'பக்காக்கி ஒட்டிக்கிலிட்டி' (Pakkaki Ottigilite) என்ற தெலுங்கு கவிதை தொகுப்பிற்காக டாக்டர் ரெட்டிக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- டாக்டர் ரெட்டி, மத்திய சாகித்ய அகாடமி விருது, கங்காதர் மெகர் தேசிய விருது மற்றும் கபீர் சம்மன் விருதுகளைப் பெற்றுள்ளார்.
- 'பக்காக்கி ஒட்டிக்கிலிட்டி' என்ற தெலுங்கு கவிதை தொகுப்பு 2016-ல் வெளியிடப்பட்டது.
- அந்த தொகுப்பு 104 கவிதைகளை உள்ளடக்குகிறது.

❖ **இந்திய பத்திரிக்கையாளரான கல்லிபூரி என்பவருக்கு ஊடகத்தில் இந்தியாவின் மிகவும் அதிகாரமிக்க பெண்கள் விருது வழங்கப்பட்டது.**

- இவர் இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் அரசியல், தத்துவம் மற்றும் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றவர்.

விளையாட்டுகள்

❖ **கேரளாவின் அழப்புலாவிலுள்ள புன்னமாடா பின்னிலைநீரில் வருடாந்தர நேரு கோப்பைக்கான படகுப் போட்டியின் இறுதியில் பல்லத்துருதி படகு அணியின் நடுபாகம் சுந்தன் முதலாவதாக வந்துள்ளார்.**

❖ **கொல்கத்தாவில் கல்யாணி விளையாட்டரங்கில் நடைபெற்ற 15 வயது குறைவான SAFF சாம்பியன்ஷிப் போட்டியில் நேபாளை இந்தியா தோற்கடித்தது.**

❖ **கிங்ஸ்டனில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் கேப்டனாக இருந்து 28வது வெற்றியைப் பதிவு செய்து மகேந்திரசிங் டோனியை கடந்து இந்தியாவின் மிகுந்த வெற்றியுள்ள கிரிக்கெட் டெஸ்ட் கேப்டனாக விராட் கோலி வந்துள்ளார்.**

- விராட் கோலி கேப்டனாக இருந்த 48 டெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டுகளில் 28-ல் வெற்றி கண்டுள்ளார்.
- ஆனால், மகேந்திர சிங் டோனி கேப்டனாக இருந்து 60 டெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டுகளில் 27-ல் மட்டுமே வெற்றி கண்டுள்ளார்.
- ஓட்டுமொத்தத்தில், 53 டெஸ்ட் விளையாட்டுகளில் வெற்றி பெற்று முன்னாள் தென்னாப்பிரிக்க கேப்டன் க்ரீமி ஸ்மித் முதலிடத்திலும், 48 டெஸ்ட் விளையாட்டுகளில் வெற்றி பெற்று முன்னாள் ஆஸ்திரேலிய கேப்டன் ரிக்கிபாண்டிங் இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

❖ **கிரிக்கெட் விளையாட்டில் மிகக் குறுகிய காலத்தில் டி-20 பன்னாட்டு விளையாட்டுகளில் மிக அதிக ரன்கள் எடுத்த இந்தியாவின் மித்தாலிராஜ் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.**

❖ **ஆப்கானிஸ்தானின் லெக்ஸ்பின்னர் ரஜீத்கான் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிகவும் இளமையான டெஸ்ட் கிரிக்கெட் கேப்டனாக வந்துள்ளார்.**

- இதற்கு முன்பு, 2004-ல் கராரேயில் நடைபெற்ற ஸ்ரீலங்கா எதிர் சிம்பாபே டெஸ்ட் போட்டியில் சிம்பாபேயின் கேப்டனாக இருந்த தடேய்ந்தா தாய்பூ 20 வருடங்கள் மற்றும் 358 நாட்கள் கொண்ட வயதுடன் கேப்டனாக இருந்தார்.
- ஆனால், செப்டம்பர் 4-ல் வங்காளதேசத்தின் சிட்டகாங்கில் நடைபெற்ற வங்காளதேசம் எதிர் ஆப்கானிஸ்தான் டெஸ்ட் போட்டியில் கேப்டனாக இருந்த ரஜுத்கான் 20

வருடங்கள் மற்றும் 350 நாட்கள் கொண்ட வயதுடன் ஆப்கானிஸ்தான் அணிக்கு கேப்டனாக இருந்தார்.

❖ **ஸ்ரீலங்க வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா T-20 கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுக்களை எடுத்த முதல் வீரராக வந்துள்ளார்.**

❖ **மங்கோலியா நாட்டின் உலான்பாட்டாரில் நடைபெற்ற 25வது ஆசிய இளையோர் மற்றும் கேடட் டேபிள் டென்னிஸ் சேம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பாயாஸ் ஜெயின் வெள்ளிப் பதக்கம் வென்றார்.**

❖ **பெங்களூரிலுள்ள எம்.சின்னச்சாமி மைதானத்தில் இந்திய சிவப்பு அணி இந்திய பச்சை அணியை வென்று டுலீப் கோப்பையை பெற்றது.**

❖ **புதுடெல்லியிலுள்ள டாக்டர் கார்னிசிங் துப்பாக்கி சுடும் மைதானத்தில் நடைபெற்ற 10மீ ஏர்ரைபில் தேசிய நிகழ்வில் காது கேளாத துப்பாக்கி சுடுபவர் தனுஷ் ஸ்ரீகாந்த் ஏற்கனவே நிகத்திய உலகப் பதிவை மிஞ்சினார்.**

❖ **நியூயார்க்கில் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் பெண்கள் பட்டத்திற்கான போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸை வென்று கனநாடாவின் பியான்கா ஆன்ட்ரீஸ்கூ பட்டம் வென்றார்.**

- 19 வயதான பியான்கா 6-3, 7-5 என்ற புள்ளிக் கணக்கில் செரினா வில்லியம்ஸை வென்று $3.85 மில்லியனுக்கான காசோலையைப் பெற்றார்.

❖ **நியூயார்க்கில் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் ஆண்கள் ஒற்றையர்கள் பட்டத்திற்கான போட்டியில் உலக எண் - 2-ல் உள்ள ரபேல் நடால் எண் 5திலுள்ள ரஷ்யாவின் டேனில் மெட்வேடெவ்வை தோற்கடித்து பட்டம் வென்றார்.**

- இது இவருக்கு 19 வது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.
- 1970-ல் கென் ரோஸ்வெல்லிற்குப் (வயது 35) பிறகு அமெரிக்க ஓப்பன் ஆண்கள் போட்டியில் இரண்டாவது மூத்தவராக நடால் உள்ளார்.

❖ **நியூடெல்லியில் நடைபெற்ற ட்ரேக் ஆசியா கோப்பை மிதிவண்டி போட்டியில் பதக்கப்பட்டியலில் இந்தியா முதலிடம் பெற்றுள்ளது.**

- அதாவது, இந்தியா இப்போட்டியில் 10 தங்கம், 8 வெள்ளி மற்றும் 7 வெண்களப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.
- ரொனால்டோ லைட்டோன்ஜம் நாட்டிற்காக 4 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- உஸ்பெகிஸ்தான் 4 தங்கம் மற்றும் 3 வெள்ளி பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடம் பெற்றது.
- மலேசியா 4 தங்கம் மற்றும் 1 வெள்ளி பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடம் பெற்றது.

❖ **2022-ல் ஹாங்சாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுகளுக்கான திட்டத்தில் கராத்தே, விளையாட்டு ஏறுதல் மற்றும் பேஸ்பால் / சாப்ட்பால் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன.**

❖ **பிரபலமான ஹாக்கி நடுவர் ஜாவித் சைக் மற்றும் பெங்களூரு அடிப்படையிலான ரகு பிரசாத் ஆகிய இரண்டு இந்தியர்களும் 2020-ல் நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

❖ **ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மேகன் ஸ்கூட் என்பவர் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் மூன்று விக்கெட்டுகளை தொடர்ந்து இரு முறை எடுத்துள்ள முதல் பெண்ணாக வரலாற்றுப் பதிவு பெற்றுள்ளது.**

- ஆன்டிக்வாவில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான 5 விளையாட்டுகள் கொண்ட தொடரின் மூன்றாவது விளையாட்டில் இவர் தொடர்ந்து மூன்று விக்கெட்டுகளை எடுத்தார்.
- இதற்கு முன்பு, சென்ற வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற இந்தியாவுக்கெதிரான T20 விளையாட்டில் இவர் மூன்று விக்கெட்டுகளை தொடர்ந்து எடுத்தார்.

❖ **கொலும்பில் நடைபெற்ற வங்காள தேசத்திற்கெதிரான இறுதிப் போட்டியில் இந்தியா பரபரப்பான ஐந்து ரன் வித்தியாசத்தில் வென்று U-19 ஆசியக் கோப்பையை வென்றது.**

❖ **பெல்ஜியத்தின் லெய்வெனில் நடைபெற்ற பெல்ஜிய பன்னாட்டு சேலஞ் பேட்மிட்டன் போட்டியில் ஆண்களின் தனிப்பட்ட விளையாட்டில் லக்சையா சென் பட்டம் வென்றார்.**

❖ **சௌரப் வர்மா என்பவர் செப்டம்பர் 15-ல் வியட்நாம் ஓப்பன் பேட்மிட்டன் பட்டத்திற்கான போட்டியில் வென்றுள்ளார்.**

❖ **இந்தியன் சட்லர் லக்சையாசென் செப்டம்பர் 15-ல் பெல்ஜிய பன்னாட்டு பட்டத்தை வென்றுள்ளார்.**

❖ **கௌசல்தர்மாமர் செப்டம்பர் 15-ல் மியான்மர் பன்னாட்டு சட்லர் பட்டத்தை வென்றுள்ளார்.**

❖ **பங்காச் அத்வாணி என்பவர் செப்டம்பர் 15-ல் மாண்டாலேயில் நடைபெற்ற IBSF உலக பில்லியாட்ஸ் சேம்பியன் ஷிப் போட்டியில் 4வது நேரடி இறுதிப்போட்டியில் வென்று 22வது உலகப்பட்டத்தை வென்றுள்ளார்.**

❖ **2006 லிருந்து முதல் முறையாக FIBA பேஸ்கட்பால் உலகக் கோப்பைக்கான விளையாட்டில் அர்ஜண்டினாவை வென்று ஸ்பெயின் கோப்பையை வென்றது.**

❖ **2020 ஒலிம்பிக்கிற்கான தகுதி பெறும் முதல் இந்திய பளுத்தூக்குபவர் விக்னேஷ் போகட் என்ற பெண்மனி ஆவார்.**

- அவர், கஜகிஸ்தான் நூற்சுல்தானில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் பளுதூக்கும் போட்டியில் அமெரிக்காவின் சாரா ஹில்டர்பிராண்டை தோற்கடிக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

❖ **கஜகிஸ்தானின் நூற் சுல்தானில் செப்டம்பர் 18-ல் நடைபெற்ற பளுதூக்கும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் விக்னேஷ் போகட் என்ற பெண் வெண்களப்பதக்கம் வென்றார்.**

❖ **தனுஷ் ஸ்ரீகாந்த் என்பவர் இந்திய தேசிய அணியில் தேர்ந்தெடுக்கப்படும் காதுகேளாத முதலாவது துப்பாக்கி சுடுபவராக வந்துள்ளார்.**

❖ **ரஷ்யாவின் எகாட்டரின்பெர்க்கில் நடந்த ஆண்களின் குத்துச்சண்டை உலக சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதியில் நுழைவதற்கு முதல் இந்திய குத்துச்சண்டை வீரராக அமித் பங்கால் நுழைந்து வரலாறு படைத்தார்.**

❖ **கஜகிஸ்தானின் நூற் - சுல்தானில் நடைபெறும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய பளுதூக்குபவர்கள் பஜ்ரங் புனியா மற்றும் ரவி தகியா ஆகிய இருவரும் தனித்தனியே வெண்களப்பதக்கம் வென்றனர்.**

❖ **25 வயதான தமிழ்நாட்டின் அர்சனா சுசீந்தரன் (மதுரை), IAAF உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களின் 200மீ நிகழ்வில் தங்கம் வென்றுள்ளார்.**

❖ **ரஷ்யாவின் எக்காடரின்பெர்க்கில் நடைபெற்ற ஆண்களின் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 52கிலோ பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய குத்துச்சண்டை வீரர் அமித் பாங்கால் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.**

- இந்த வெற்றியின் மூலம், பாங்கால் குத்துச்சண்டைப் போட்டியில் தனது முதல் பதக்கத்தை பதிவு செய்துள்ளார்.

❖ **கஜகிஸ்தானின் நூர்சுல்தானில் நடைபெற்ற உலக பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதியில் தீபக் புனியா நுழைந்தார்.**

- உலகின் இறுதிப் போட்டியை அடையும் இளமையான இந்திய பளுதூக்கும் வீரராக 20 வயதுடைய புனியா வந்துள்ளார்.

❖ **கஜகிஸ்தானின் நூர் - சுல்தானில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 86கி பிரிவில் ஈரான் நாட்டு வீரர் ஹசன் யஜ்டானியுடன் இறுதிப் போட்டியில் விளையாடி இந்தியாவின் தீபக் புனியா வெள்ளி பதக்கம் வென்றார்.**

- 2020-ல் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் 4 இந்தியர்கள் - விக்னேஷ் போகத், ரவிகுமார் தகியா, பஜ்ரங் புனியா மற்றும் தீபக் புனியா ஆகிய நால்வரும் பளு தூக்கும் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளன.

❖ **கஜகிஸ்தானின் நூர்-சுல்தானில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியின் 61கிலோ பிரிவில் அமெரிக்காவின் டைலர் கிராப்பை தோற்கடித்து இந்தியாவின் ராகுல் அவேர் வெண்களப் பதக்கம் வென்றார்.**

- இந்த வெற்றியுடன் இந்தியாவிற்கு 5 பதக்கங்கள் கிடைத்தன. இதில் ஒரு வெள்ளி நான்கு வெண்களப் பதக்கங்கள் அடங்கும்.
- 2019 ஆம் ஆண்டின் உலக பளுதூக்கும் போட்டியில் இந்திய வெற்றியாளர்களான பஜ்ரங் புனியா, ரவி தகியா மற்றும் விக்னேஷ் போகத் ஆகியோர் வெண்களப் பதக்கம் வென்றனர்.

❖ **ரஷ்யாவின் ஸ்கோல்கோவோவில் நடைபெற்ற FIDE பெண்களின் கிராண்ட் ப்ரிக்ஸை ஜி.எம் கோனேரு ஹம்பி வென்றுள்ளார்.**

❖ **அமெரிக்காவின் கால்பந்து ஜாம்பவான்களான லையனல் மெஸ்ஸி மற்றும் மேகன் ரேபினோ ஆகிய இருவரும் 2010 ஆம் ஆண்டிற்கான FIFA சிறந்த விளையாட்டாளர் விருதை முறையே ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் பெற்றுள்ளனர்.**

- இது மெஸ்ஸி என்பவருக்கு ஆறாவது விருதாகும்.
- ரோனால்டோ என்பவர் இவ்விருதை 5 முறை பெற்றுள்ளார்.

❖ **அருணாச்சல பிரதேசத்தின் பேசிக்காட்டில் நடைபெற்ற முதுநிலை ஆண்கள் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் மணிப்பூர் பட்டம் வென்றது.**

❖ **ஆசிய பவர்லி.ஃப்டிங் சாம்பியன்ஷிப் தங்கப்பதக்கத்தைப் பெற்ற ஆர்த்தி அருண், 2019-ன் காமன்வெல்த் பவர்லி.ஃப்டிங் சாம்பியன்ஷிப் போட்டிகளில் 72 கிலோ பிரிவில் 5 தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளார்.**

- 22 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரே விளையாட்டாளர் ஆர்த்தி அருண் ஆவார்.

❖ **மண்டாலேயில் நடைபெறும் IBSF உலக ஸ்னூக்கர் அணி நிகழ்வில் உலக சாம்பியன்களாக இந்தியாவின் பங்கஜ் அத்வானி மற்றும் ஆதித்யா மேத்தா ஆகிய இருவரும் வெளிவந்துள்ளனர்.**

❖ **முன்னாள் BCCI தலைவர் என்.சீனிவாசனின் மகள் ரூபா குருணாத், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் (TNCA) புதிய தலைவராக பதவி ஏற்றுக்கொண்டார்.**

- ரூபா மற்றும் அவரைச் சேர்ந்த அலுவலர்கள் 2019-2020 லிருந்து 2021-2022 வரையான மூன்று வருடங்களுக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- 45 வயதான ரூபா இந்தியா சிமெண்டின் முழுநேர இயக்குநராக இருந்தார்.

❖ **உலக சாம்பியன் வெள்ளி பதக்கம் பெற்ற பளுதூக்குபவர் தீபக் புனியா என்பவர் 86கிலோ பிரிவில் புதிய உலக எண் ஒன்றாக வந்துள்ளார்.**

❖ **பெங்களூரில் நடைபெற்ற 10வது ஆசிய நீந்தும் சாம்பியன்ஷிப் போட்டியில் மொத்தம் 52 பதக்கங்களைப் பெற்று இந்தியா நான்காம் இடம் பெற்றது.**

- இந்தியா 15 தங்கம், 19 வெள்ளி மற்றும் 18 வெண்களப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.
- ஜப்பான் 47 தங்கம், 17 வெள்ளி மற்றும் 15 வெண்களம் ஆகமொத்தம் 79 பதக்கங்களைப் பெற்று முதலிடம் பெற்றது.
- தாய்லாந்து 21 தங்கம், 18 வெள்ளி மற்றும் 24 வெண்களம் ஆகமொத்தம் 63 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடம் பெற்றது.
- ஹாங்காங் 15 தங்கம், 24 வெள்ளி மற்றும் 18 வெண்களம் ஆகமொத்தம் 57 பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடம் பெற்றது.
- 2017 –ல் தாஸ்கண்ட்டில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 40 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

❖ **தமிழ்நாட்டின் சி.ஏ.பவானி தேவி செப்டம்பர் 29-ல் பெல்ஜியம் நாட்டில் கேன்ட்டில் நடைபெற்ற உலக அளவிலான டோர்நோய் செயற்கைகோள் போட்டியில் பெண்களின் தனிப்பட்ட பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.**

❖ **முதல் முறையாக 18 வயதிற்குள்ளான** SAFF **கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா வென்று பட்டம் பெற்றுள்ளது.**

- காட்மண்டுவில் செப்டம்பர் 29-ல் நடைபெற்ற இப்பட்டத்திற்கான இப்போட்டியில் இந்திய அணி வங்காளதேச அணியை தோற்கடித்தது.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

❖ **The Indian Space Research Organisation (ISRO) – to carry out the separation of Chandrayaan – 2 landing module (lander Vikram and rover Pragyan) from the orbiter between 12.45 pm and 1.45 pm on September 2.**

❖ **சென்னை அடிப்படையிலான பெருங்கடல் தொழில்நுட்பத்தின் தேசிய நிறுவனம்** (National Institute of Ocean Technology – NIOT) **அதன் விருப்பமுள்ள சமுத்ரயான் திட்டத்தை 2021-2022 –ல் மேற்கொள்ளவுள்ளது.**

❖ **16.2 டன் மற்றும் அதற்கு மேலான எடையுள்ள கனரக வாகனங்களை உருவாக்குவதற்கான** BS-VI **சான்றை பெற்றுள்ள முதல் இந்திய நிறுவனமாக அசோக் லேலாண்ட் வந்துள்ளது.**

- இந்த நிறுவனம், ஏப்ரல் 1, 2020-ல் நடைமுறைக்கு வரவுள்ள BS-VI உமிழ்வுகளை சந்திப்பதற்கான முதல் இந்திய ஆரம்ப கருவி உற்பத்தியாளராக (Original Equipment Manufacturer – OEM) உள்ளது.

❖ **Chandrayaan -2's Vikram lander – lost contact with ISRO at a distance of barely 2.1 km from the Moon's surface after a 48 – day journey in the early hours of September 7, 2019.**

❖ **Isro – to tie up with Japan Aerospace Exploration Agency (Jaxa) for its next moon mission, Lunar Polar Exploration (LPE)**

❖ **வாழ்க்கைக்கு அடிப்படையாக உதவும் பூமியிலுள்ள தட்பவெப்ப நிலைகளைப் பெற்றுள்ளது. ஒரு வெளிக்கோளின் வளிமண்டலத்தில் முதல் முறையாக தண்ணீர் கண்டறியப்பட்டதை விஞ்ஞானிகள் அறிவித்துள்ளன.**

- இந்த வெளிக்கோள் K2-18b என கூறப்படுகிறது மற்றும் இது பூமியைவிட இரண்டு மடங்கானதாகும்.
- இதுவரை 4000க்கும் அதிகமான வெளிக்கோள்கள் கண்டறியப்பட்டுள்ளன.

❖ **Global standards body 3GPP – has approved India's regional navigation system NaVIC, developed by Indian Space Research Organisation (ISRO)**

❖ **இந்திய கர்நாடக இசையில் மிகவும் அணுபவமிக்க பண்டிட் ஜாஸ்ராஜ், அவருடைய பெயருக்குப்பின்பு, ஒரு வான்கோளைப் பெற்றுள்ள முதல் இந்திய இசையமைப்பாளராக வந்துள்ளார்.**

- பன்னாட்டு வானவியல் ஒன்றியம் (International Austronomical Union – IAU) இவ்வித சிறந்த கலைஞரைப் பெருமைப்படுத்தும் வண்ணம் அவருடைய பெயர் பண்டிட் ஜாஸ்ராஜ் என்பதற்கு 2006 VP32 (எண் - 300128) என்பது கொடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு

❖ **சென்னைக்கு அருகிலுள்ள காட்டுப்பள்ளி** L&T **கப்பல்கட்டும் தளத்தில் ஒரு கடலோர பாதுகாப்புப்படை கடற்கரை ரோந்து கப்பல்** (Offshore Patrol Vessel – OPV) **யார்டு – 45005 தொடங்கப்பட்டது.**

❖ **2019 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியா – பாக்கிஸ்தான் எல்லை வழியாக முதலாவது ஒருங்கிணைந்த யுத்தக்குழுவை** (Integrated Battle Group – IBG) **இந்திய இராணுவம் நிறுத்தி வைக்கவுள்ளது.**

- இந்திய இராணுவம் இவ்வித குழுக்களை 11 லிருந்து 13 வரை மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய எல்லைகளில் நிறுத்தவுள்ளது.

❖ **இந்திய விமானப்படையின் தலைவர் பி.எஸ்.தனோவா தனது ஓய்விற்கு முன்பு, வீர்சக்ர விருது பெற்ற விங்கமேன்டர் அபிநந்தன் வர்மானுடன் விண்ணில் பரந்தார்.**

❖ **இந்திய விமானப்படை செப்டம்பர் 3-ல் பதான்கோட் விமானப்படைத் தளத்தில் முதலாவது 8 அப்பாச்சி ஹெலிக்காப்டர்களை அறிமுகப்படுத்தியது.**

- AH-64E திறன் கொண்ட அப்பாச்சி ஹெலிக்காப்டர்களை வாங்கும் 16 வது நாடாக இந்தியா உள்ளது.
- செப்டம்பர் 2015-ல் 22 அப்பாச்சி ஹெலிக்காப்டர்களை இந்தியாவிற்கு வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்பந்தம் செய்துள்ளது.
- அதன் முதல் பகுதியாக தற்போது 8 அப்பாச்சி ஹெலிக்காப்டர்களை இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.

❖ **யூத் அபியாஸ் 2019 என்ற இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி செப்டம்பர் 5-ல் வாஷிங்டன் அருகிலுள்ள கூட்டு தள லீவிஸ் மகார்டில் நடைபெறுகிறது.**

- இந்த கூட்டுப் பயிற்சி இருநாடுகளுக்கிடையேயான 15 வது கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.
- இப்பயிற்சி செப்டம்பர் 18-ல் முடிவடைகிறது.

❖ **INS காந்தரி என்ற கப்பல் செப்டம்பர் 28-ல் மும்பையில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.**

❖ **இந்திய விமானப்படை, செப்டம்பர் 10-ல் அம்பாலாவில் அதன் 17 பொன் அம்புகள் போர்க்கப்பல்களை புத்துயிர்பெறச் செய்துள்ளது.**

❖ **இந்திய இராணுவம், 15,000 படைகள் உள்ளடங்கிய அதன் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த யுத்த குழுக்களுடன் (Integrated Battle Groups – IBG) அருணாச்சலபிரதேசம் மற்றும் அஸ்ஸாமில் 'ஹிம்விஜய் (HimVijay)' என்ற ஒரு பிரதான பயிற்சியை வரும் அக்டோபரில் தொடங்கி நடத்தவுள்ளது.**

❖ **The naval variant of the indigenous Tejas light combat aircraft (LCA) – successfully conducted an "arrested landing" for the first time on a shore – based runway.**

❖ **In a first, SSS Defence, a firm in Bengaluru – has indigenously designed and developed two sniper rifle prototypes for the armed forces.**

❖ **செப்டம்பர் 16 முதல் 29 வரை மேகாலயா மாநிலத்தின் உம்ராயில் வெளிநாட்டு பயிற்சி மையத்தில் நடக்கவுள்ள MAITREE – 2019 என்ற கூட்டு இராணுவ பயிற்சிக்கு இந்தியாவும், தாய்லாந்தும் ஏற்பாடு செய்துள்ளன.**

- இந்த பயிற்சியில் வனங்களில் மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான பயிற்சிக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

❖ **DRDO – successfully test – fired an indigenously – developed Man-Portable Anti-Tank Guided Missile (MPATGM) system on September 11 at Kurnool, Andhra Pradesh**

❖ **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் இந்திய விமானப்படை ஆகிய இரண்டும் இணைந்து செப்டம்பர் 18-ல் புலப்படும் வானிலிருந்து வானுக்குரிய ஏவுகணையைத் தாண்டி ஆஸ்ட்ராவின் மூன்றாவது சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.**

❖ **இந்தியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகள் இடையேயான ஒரு கப்பற்படை பயிற்சியான SITMEX – 19 அந்தமான் கடல் பகுதிகளில் தொடங்கியுள்ளது.**

❖ The Indian Air Force – has "technically accepted" the Rafale jet at the Bordeaux manufacturing facility of Dassault Aviation in France.

❖ **இரண்டாவது** INS **காந்தேரி என்ற ஸ்கோர்பென் போர்க்கப்பல் சமீபத்தில் மேஸகான் டக் நிறுவனத்தால் இந்திய கப்பற்படைக்கு வழங்கப்பட்டது.**

- அது, செப்டம்பர் 28-ல் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கால் துவக்கி வைக்கப்படும்.
- இந்த காந்தரி போர்க்கப்பல் 1775 டன் எடையுள்ளது.
- இந்திய கப்பற்படை முதலாவது காந்தாரி போர்க்கப்பலை டிசம்பர் 6, 1968-ல் தொடக்கி இருந்தது மற்றும் அது அக்டோபர் 18, 1989-ல் நிறுத்தப்பட்டது.

❖ **ஒரு புனரமைக்கப்பட்ட மேம்பாட்டு தரையிரங்கும் மைதானத்தை** (Advance Landing Ground –ALG) **அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள விஜயநகரில் இந்திய விமானப்படை சமீபத்தில் தொடங்கியுள்ளது.**

- இது, சீனா மற்றும் மியான்மர் எல்லைப் பகுதிகளில் இராணுவச் செயல்பாட்டைக் கவனிக்கும் போக்குவரத்தாக அமையும்.
- இதுவரை நாட்டில் ரூ.720 கோடி செலவில் 8 மேம்பாட்டு தரையிறங்கும் மைதானங்களை இந்திய விமானப்படை உருவாக்கியுள்ளது.

❖ **பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், கடலோரக் காவல்ப்படை பொது இயக்குநர் கே. நடராஜன் முன்னிலையில் சென்னை துறைமுகப் பொறுப்பு கழகத்தில்** ICGS **வர்ஷா என்ற கடலோரக் காவல்ப்படை ரோந்து கப்பலைத் தொடக்கி வைத்தார்.**

- எண்ணூர் அருகிலுள்ள காட்டுப்பள்ளியில் லார்சன் மற்றும் டூப்ரோ நிறுவனத்தால் இந்தக் கப்பல் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது.
- இந்திய கடலோர காவல்படைக்கான ரோந்து கப்பல்களின் இது நான்காவது வரிசையை சேர்ந்ததாகும்.

❖ **இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே செய்யப்பட்ட ஏவுகணையான 'ஆஸ்டிரா' என்ற 'பார்வைக்கு தெரியாத அளவில் வானிலிருந்து வான்நோக்கி தாக்கும் ஏவுகணையை' (Beyond visual range air – to – air missile – BVRAAM) 15 ஆண்டுகளுக்குப்பின்பு, தற்போது இறுதியாக இராணுவத்தில் பயன்படுத்தத் தயாராகவுள்ளது.**

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (**DRDO**) ஆஸ்டிராவில் தாக்கும் வேகத்தை 110கி.மீட்டரிலிருந்து 160 கி.மீட்டருக்குமேல் ஆக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

❖ **பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பெல்லாடு பியரிலுள்ள கப்பல் துறைமுகத்தில் ஐ.என்.எஸ். காந்தாரி என்ற இரண்டாவது நீர்மூழ்கி கப்பலை தொடங்கி வைத்தார்.**

- இது கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகள் பயிற்சிக்குப் பின்பு தற்போது கப்பற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவும் அண்டைநாடுகளும்

❖ **வங்காளதேசத்திலுள்ள மெக்னாகாட்டில் 750 மெகாவாட் வாயு அடிப்படையான கூட்டு சக்தி உலையை அமைப்பதற்கு JERA என்ற ஜப்பான் சக்தி நிறுவனத்துடன் ரிலையன்ஸ் சக்தி ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.**

- இந்த திட்டத்தினால் இந்தியா மற்றும் ஜப்பானிடமிருந்து மிகஅதிக வெளிநாட்டு நேரடி முதலீடுகளை வங்காளதேசம் பெற்றுள்ளது.
- இந்தியாவின் திரிபுரா மாநிலம் வங்காளதேசத்திற்கு கிட்டத்தட்ட 190 மெகாவாட் மின்சாரத்தை அளிக்கிறது.

❖ **அட்டாரியில் நடைபெற்ற மூன்றாவது பேச்சுவார்த்தையில் கர்டாப்பூர் சாகிப் காரிடர் மீதான ஒப்பந்தத்தை இறுதி நிலைப்படுத்துவதற்கு இந்தியாவும் பாக்கிஸ்தானும் தோல்வி அடைந்தன.**

❖ **India – announced a 'Staggering' $1 billion line of credit for Russia's resource rich Far East region.**

❖ **இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான முதலாவது 2+2 கூட்டம் வெகுவிரைவில் நடைபெறவுள்ளது.**

- ஏற்கனவே, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் 2+2 பேச்சு வார்த்தையை இந்தியா நடத்தியுள்ளது. தற்போது, ஜப்பானுடன் இந்தியா நடத்தவுள்ளது.

❖ **தெற்காசிய துணை பிராந்திய பொருளாதார கூட்டுறவு** (South Asia Sub-regional Economic Cooperation – SASEC) **என்ற ஒரு புதிய பிராந்திய பொருளாதார மண்டலம் உருவாவதை இந்தியா ஆதரிக்கிறது.**

- இந்த புதிய மண்டலம், பாக்கிஸ்தானைத் தவிர மற்ற தெற்காசிய நாடுகளை உள்ளடக்கும்
- இந்த அமைப்பு மியான்மர், வங்காளதேசம், நேபாளம், பூட்டான், ஸ்ரீலங்கா, மாலத்தீவு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை உள்ளடக்கும்.
- 2001-ல் வங்காளதேசம், பூட்டான், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் இந்த அமைப்பிற்கு அடிக்கல் நாட்டின.
- 2014-ல் மாலத்தீவு மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகள் இந்த அமைப்பில் சேர்ந்தன மற்றும் 2017-ல் மியான்மர் இதற்குள் அடங்கியது.
- அதற்கான யுக்திகளை வகுப்பதற்கு இந்த அமைப்பிலுள்ள நாடுகளின் நிதியமைச்சர்கள் புதுடெல்லியில் சந்திக்கவுள்ளனர்.

❖ **செப்டம்பர் 10-ல் தெற்காசியாவின் முதலாவது எல்லைவழி எண்ணெய் உற்பத்தி குழாய்வழியை இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய இரு நாடுகளும் இணைந்து தொடங்கியுள்ளன.**

- இது 69 கிலோமீட்டர் குழாய் வழி விரிவாக்கமாகும்.
- அண்டையோர்க்கு முன்னுரிமை கொள்கை அடிப்படையில் ரூ.324 கோடி செலவில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- 1974 லிருந்து எரிபொருள் வழங்கும் ஒப்பந்தத்தை இந்தியாவும் நேபாளமும் பெற்றுள்ளன மற்றும் 1996-ல் குழாய் வழி திட்டம் முதன் முதலாக முன்மொழியப்பட்டது.
- இந்தக் குழாய் வழித் திட்டம் மார்ச் 2017-ல் இறுதிநிலையை அடைந்தது.

❖ **அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், மக்களுக்கு மக்கள் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு களங்களில் ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கு மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இந்தியாவும், சுவிட்சர்லாந்தும் கையொப்பமிட்டுள்ளன.**

- இந்த ஒப்பந்தங்கள் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மற்றும் சுவிட்சர்லாந்து ஜனாதிபதி யூலி மௌரர் முன்னிலையில் நடைபெற்றன.
- மூன்று ஒப்பந்தங்கள் 1. காலநிலை மாற்றம் மீதான தொழில்நுட்ப ஒத்துழைப்பு 2. அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டு மற்றும் 3. லாசானே பல்கலைக்கழகத்திலுள்ள இந்தி இருக்கையை மறுபதிவு செய்வது.
- தற்போது இந்திய ஜனாதிபதி செப்டம்பர் 9லிருந்து ஸ்விட்சர்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் சுலோவேனியா ஆகிய மூன்று நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளுகிறார்.

❖ **பாக்கிஸ்தான் நவம்பர் 9-ல் இந்திய சீக்கிய யாத்திரிகைகளுக்கான கர்த்தாப்பூர் காரிடரை திறக்கும் என்று அறிவித்துள்ளது.**

- 1522-ல் சீக்கியமத நிறுவனர் குருநானக்தேவ் அமைத்த கர்த்தாப்பூர் சாகிப்பை பார்வையிடுவதற்கு இந்திய யாத்திரிகைகள் அனுமதிபெறக் கடமைப்பட்டுள்ளனர்.
- குருநானக்தேவின் 550வது பிறந்தநாள் வருகின்ற நவம்பர் 12-ல் கொண்டாடப்படவுள்ளது.

❖ **இந்தியா மற்றும் மங்கோலியா, செப்டம்பர் 19-ல் பண்பாடு, வானியல் ஆய்வு, கால்நடை சுகாதாரம் மற்றும் பால்வளம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய களங்களில் ஒத்துழைப்பு மீதான நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டனர்.**

❖ **2020 –ல் வங்கதேச நிறுவன தந்தை ஜேக் முஜ்பூர் ரஹ்மான் என்ற 'பங்கபந்துவின்' 100 வருடங்களை கொண்டாடுவதற்கும் மற்றும் 2021-ல் வங்கதேசத்தின் 50வது சுதந்திர தினவிழாவை குறிப்பிடும் ஒரு பன்னாட்டு கப்பற்படை மறுஆய்வை நடத்துவதற்கும் இந்தியா வங்காள தேசத்துடன் இணைந்து செயல்படும்.**

மாநாடுகள், உச்சிமாநாடுகள்

❖ **விலாடிவோஸ்டாக்கில் நடைபெறும் ஐந்தாவது கிழக்கத்திய பொருளாதார அமைப்பில் தலைமை விருந்தினராக பங்கேற்பதற்கு பிரதமர் நரேந்திரமோடி ரஷ்யா சென்றுள்ளார்.**

❖ **லேயிலுள்ள லே அரண்மனையில் முதலாவது கைபேசி அறிவியல் பொருட்காட்சி துவக்கி வைக்கப்பட்டது.**

❖ **17 வது பசுமைக்கட்டிட காங்கிரஸ் செப்டம்பர் 26-ல் ஹைதராபாத்தில் கூட்டப்பட்டது.**

- அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திற்கு அடுத்து 7 பில்லியன் சதுரஅடி பசுமையைப் பெற்று இந்தியா மூன்றாமிடம் வகிக்கிறது.
- 2022 வாக்கில் 10 பில்லியன் சதுரஅடி பசுமையை ஏற்படுத்த இந்தியா முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

மாமனிதர்கள்

❖ **பாக்கிஸ்தானிலுள்ள சிந்து மாகாணத்தில் முதல் முறையாக ஒரு ஹிந்து சிறுமியான புஷ்பா ஹோலி என்பவர் மாநில போட்டித் தேர்வில் வெற்றி பெற்று காவல்துறை அலுவலராக வந்துள்ளார்.**

❖ **ஒரு வர்த்தக விமானத்தில் பறப்பதற்கு ஒடிசாவிலிருந்து முதல் பழங்குடிப் பெண்ணாக அனுப்பிரியா லாக்ரா வந்துள்ளார்.**

- 27 வயதான அனுப்பிரியா என்ற பழங்குடியினப் பெண் ஒடிசாவின் மாவோயீஸ்ட் தாக்குதலுக்குட்பட்ட மால்கன்கிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- இவர் 2012-ல் தனது பொறியியல் படிப்பை முடித்தப்பின்பு புவனேஷ்வரிலுள்ள பறக்கும் பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்தார்.
- இன்று அந்தப்பெண் இணை விமானியாக வானில் பயணித்து மாமனிதராகியுள்ளார்.

❖ **சீன மின்னணு வர்த்தக பூதாகர அமைப்பான அலிபாபாவின் நிறுவனர் ஜேக் மா அதன் 20 வது வருட முடிவில் தனது தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறினார்.**

- ஜேக் மாவின் இடத்தில் தலைமைச் செயல் அலுவலர் டேனியல் ஜாங்க் செயல்படவுள்ளார்.
- ஜேக் மா இந்த அலிபாபா நிறுவனத்தை 1999-ல் 18 பேர் கொண்ட ஒரு குழுவுடன் ஆரம்பித்தார்.

❖ **தடைசெய்யப்பட்ட டெக்ரீக் - இ - தலிபான் பாக்கிஸ்தான் தலைவரான நூர் வாலி மசூட்டை ஒரு உலக பயங்கரவாதி என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.**

❖ **பராக் ஒபாமா மற்றும் டெனால்டு ட்ரம்ப் ஆகியோருக்கு அடுத்து ட்விட்டரில் மூன்றாவதாக அதிகம் பின்பற்றப்படும் உலகத் தலைவராக பிரதமர் நரேந்திரமோடி வந்துள்ளார்.**

- அவர் தனது ட்விட்டர் கணக்கில் சமீபத்தில் 50 மில்லியன் தொண்டர்களை கடந்தார்.
- 64 மில்லியன் தொண்டர்களை கொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப்க்கு அடுத்து இவர் உள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடி 2009-ல் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது ட்விட்டர் பயன்படுத்த துவக்கினார்.
- 2009 லிருந்து 2017 வரை அமெரிக்காவின் 44 வது ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா தனது ட்விட்டர் கணக்கில் 108.4 மில்லியன் தொண்டர்களைப் பெற்று உலகில் முதல் இடத்தில் உள்ளார்.

❖ **விங் கமேன்டர் அஞ்சலி சிங் என்பவர் வெளிநாடுகளிலுள்ள எந்த இந்திய தூதரகத்திலும் இந்தியாவின் முதல் பெண் இராணுவ தூதராக நியமிக்கப்படலாம்.**

- அஞ்சலி என்பவர் செப்டம்பர் 10-ல் ரஷ்யாவின் மாஸ்கோவிலுள்ள இந்திய தூதரகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

❖ **அமெரிக்காவைச் சேர்ந்த நீந்தும் பெண்ணான சாரா தாமஸ் என்பவர் 4 முறை இங்கிலிஷ் கால்வாயை கடந்த முதல் பெண்மனியாக வந்துள்ளார்.**

❖ **Mayak Vaid – has become first ever Asian to complete Enduroman triathlon in a world record time.**

❖ **பாக்கிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் ஷா முகமது குரேஷி, நவம்பர் 9, 2019-ல் கர்தார்பூர் காரிடார் தொடக்கத்திற்காக முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை அழைத்து அறிவித்துள்ளார்.**

- அது, முதலாவது சீக்கிய குருவான குருநானக் தேவின் 550வது பிறந்தநாளை முன்னிட்டு இந்திய சீக் யாத்திரிகைகளுக்காக திறக்கப்படும்.
- இந்த கர்தார்பூர் சாகிப் க்ருதுவாரா என்பது 1522-ல் குருநானக் தேவால் நிறுவப்பட்டிருக்கிறது என நம்பப்படுகிறது.
- கர்தார்பூர் காரிடார் என்பது குருநானக் தேவின் இறுதி இடமான தர்பார் சாகிப்பை இணைக்கும் வகையில் இந்தியாவும் பாக்கிஸ்தானும் இணைந்து கட்டப்பட்டுள்ளது.

தரவரிசை பட்டியல்

❖ **பொருளாதார நுண்ணறிவு அலகின் 2019 ஆம் ஆண்டின் உலக உயிர்திறன் குறியீட்டின்படி, உலகில் ஆஸ்திரியாவிலுள்ள வியன்னா, ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போன் மற்றும் சிட்னி ஆகிய மூன்று நகரங்கள் முதல் அல்லது மேல் தரப்படுத்தப்பட்டுள்ளன.**

- சென்ற வருடம் மெல்போன் முதலிடத்தை பெற்றிருந்தது. ஆனால், இந்த வருடம் வியன்னா முதலிடத்தை பெற்றுள்ளது.
- உலகத்திலுள்ள 140 நாடுகள் இந்த உலக உயிர்த்திறன் குறியீட்டு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.
- அமெரிக்க நகரங்களில் ஹானோலுலு என்ற நகரம் 22 வது தரத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவிலுள்ள டெல்லி 118வது இடத்தையும் மற்றும் மும்மை 119வது இடத்தையும் பெற்றள்ளது.
- கடைசி மற்றும் 140 வது தரத்தில் சிரியா நாட்டிலுள்ள டமாஸ்கஸ் உள்ளது.
- ஒட்டுமொத்தத்தில், ஆஸ்திரிய நாட்டின் வியன்னா நகரம் முதல் தரத்தையும், ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் இரண்டாம் இடத்தையும், சிட்னி மூன்றாம் இடத்தையும், ஜப்பான் நாட்டின் ஒசாகா நான்காம் இடத்தையும் மற்றும் கனடா நாட்டின் கால்கறி ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

❖ **டைம்ஸ் உயர்கல்வி (Times Higher Education –THE) அமைப்பு வெளியிட்ட 2020 ஆம் ஆண்டுக்கான உலகப் பல்கலைக்கழக தரங்கள்.**

- முதலிடம் - இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்
- இரண்டாம் இடம் - அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனம்
- மூன்றாம் இடம் - இங்கிலாந்தின் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம்
- நான்காம் இடம் - அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம்
- ஐந்தாம் இடம் - அமெரிக்காவின் மாசாசூசட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம்
- ஆனால், இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் குறிப்பாக இந்திய அறிவியல் நிறுவனம், **IIT** பாம்பே, **IIT** டெல்லி, **IIT** கராக்பூர், **IIT** இந்தூர் போன்றவை 300 லிருந்து 500 வரை உள்ள தரங்களில் இடம் பெறுகின்றன.

❖ **வஜிஸ்டா ஆறு (தமிழ்நாடு), ஹாக்கர் (ஹரியானா மற்றும் பஞ்சாப்), பாதார் (குஜராத்), மிதி (மஹாராஷ்டிரா), சபர்மதி (குஜராத்) ஹிண்டன் (உத்திரபிரதேசம்) மற்றும் சட்லஜ் (பஞ்சாப்) ஆகிய ஐந்து ஆறுகளும் நாட்டிலுள்ள மேல்மட்ட ஐந்து மிகவும் அழுக்கடையான ஆறுகள் என தரப்படுத்தப்பட்டுள்ளன.**

- மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் 351 மாசுபடிந்த ஆறுகள் கணக்கில் எடுக்கப்பட்டு 25 மிகவும் அழுக்காறான ஆறுகள் தரப்படுத்தப்பட்டன.

❖ **ரிலையன்ஸ் தொழில்களின் தலைவர் முகேஷ் அம்பாணி ரூ.3,80,700 கோடி நிகர சொத்துடன் தொடர்ந்து 8வது வருடமாக மிகப்பணக்கார இந்தியர்கள் வரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.**

❖ **2019-ன் IMD உலக எண்ணியல் போட்டித்தன்மை தரப்படுத்துதலில் (World Digital Competitiveness Ranking – WDCR) நான்கு இடங்கள் முன்னேறி இந்தியா 44வது தரத்தைப் பெற்றுள்ளது.**

- இத்தரப்படுத்துதலில், அறிவு, தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால தயார்நிலை ஆகிய மூன்று அளவுகோல்களை வைத்து நாடுகளுக்கிடையே எண்ணியல் போட்டித்தன்மை தரப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டது.

- இதில், அமெரிக்கா முதலிடத்திலும், சிங்கப்பூர் இரண்டாம் இடத்திலும், ஸ்வீடன் மூன்றாவது இடத்திலும், டென்மார்க் நான்காவது இடத்திலும் மற்றும் ஸ்விட்சர்லாந்து ஐந்தாம் இடத்திலும் உள்ளன.
- இந்தியா சென்ற வருடம் 48வது தரத்தில் இருந்தது. ஆனால், இந்த வருடம் 4 தரங்கள் முன்னேறி 44வது தரத்தில் உள்ளது.

❖ **நித்தி ஆயோக் முதன் முதலாக நாட்டின் பள்ளிக் கல்வி தகுதி தரத்தை வெளியிட்டுள்ளது.**

- 2019 ஆம் ஆண்டின் பள்ளிக் கல்வித் தகுதி குறியீடு மீதான நித்தி ஆயோக்கின் அறிக்கை செப்டம்பர் 30-ல் வெளியிடப்படவுள்ளது.
- அவ்வித தரங்களின்படி, ராஜஸ்தான், கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்கள் ஒட்டுமொத்தமாக முதலிடம் வகிக்கின்றன.
- பள்ளிக் கல்வி தொடர்பான சிறந்த நிர்வாகத்தில் டெல்லி முதலிடம் பெற்றுள்ளது.
- இந்த தரத்தில் இறுதி இடத்தை உத்திரபிரதேசம் பெற்றுள்ளது.

இரங்கல்

❖ **2017-ல் தான் வெளியேற்றப்பட்டதற்கு முன்பு உலகின் மூத்த அரசின் தலைவராக இருந்த ரராபர்ட் முகாபே சிங்கப்பூரில் தனது 95வது வயதில் காலமானார்.**

❖ **முன்னாள் மத்திய அமைச்சரும் மற்றும் மூத்த குற்றவியல் சட்ட வழக்கறிஞருமான ராம்செத்மலானின் தனது 95 வது வயதில் காலமானார்.**

- இவர் 1977-ல் பாரதிய ஜனசங்க் ஆதரவுடன் பம்பாய் வடமேற்கு மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.
- அவர் முதல் முறையாக 1988-ல் ராஜ்ய சபை உறுப்பினரானார்.
- 1996-ல் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் அமைச்சரவையில் இவர் சட்ட அமைச்சரானார்.
- மே 7, 2010-ல் உச்சநீதிமன்ற பார் கழகத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 70 வருடங்களுக்கு மேல் வழக்கறிஞராக பணிபுரிந்த இவர் செப்டம்பர் 2017-ல் தனது ஓய்வை அறிவித்தார்.
- 1977-ல் சட்டத்தின் மூலமாக உலக அமைதி என்ற நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட மனித உரிமைகள் விருதை இவர் பெற்றார்.

❖ **பசுமைப்புரட்சி முன்னோடியான பேராசிரியர் கேம் சிங் கில் செப்டம்பர் 17-ல் லூதியானாவில் தனது 89 வது வயதில் காலமானார்.**

தேசிய தினம்

❖ **செப்டம்பர் 5 ஆசிரியர் தினம்**

- இந்தியாவின் முதல் துணை ஜனாதிபதியும் (1952 – 1962) மற்றும் இரண்டாவது ஜனாதிபதியுமான (1962-1967) டாக்டர் சர்வபல்லி ராதாகிருஷ்ணன் பிறந்தநாளை இது குறிப்பிடுகிறது.
- அவர் இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதியாக வந்த 1962 ஆம் ஆண்டிலிருந்து இந்நாள் கொண்டாடப்படுகிறது.

முக்கிய தினங்கள்

❖ **செப்டம்பர் 15 - பொறியாளர்கள் தினம்**

❖ **செப்டம்பர் 16 – உலக ஓசோன் தினம்**

நூல்கள் மற்றும் ஆசிரியர்கள்

❖ **ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தனது இரண்டாவது வருட பதவிக்காலத்தில் நிகழ்த்திய பல்வேறு உரைகளில் 95 உரைகளைத் தேர்வுசெய்து இரண்டு புத்தகங்களாக்கப்பட்டன.**

- இவ்விரண்டு புத்தகங்கள் லோக்தந்ர கீ ஸ்வார் மற்றும் ரிபப்லிக்கன் எத்னிக் ஆகும்.
- இவ்விரண்டு புத்தகங்களையும் புதுடெல்லியில் துணை ஜனாதிபதி எம்.வெங்கையாநாயுடு வெளியிட்டார்.

பன்னாட்டு தினம்

❖ **செப்டம்பர் 21 - உலக அல்சைமர் (முதுமறதி) தினம்**

❖ **செப்டம்பர் 21 – அமைதியின் பன்னாட்டு தினம்**

- 2019 ஆம் ஆண்டின் மையக்கருத்தாக ''அமைதிக்கான காலநிலை செயல்பாடு'' என்பதை ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

❖ **செப்டம்பர் 22 உலக காண்டாமிருக தினமாகும்**

- உலக காண்டாமிருக தினம் 2010-ல் தென்னாப்பிரிக்காவில் உலக வனவிலங்கு நிதியால் (World Wildlife Fund – WWF) ஆரம்பிக்கப்பட்டது.
- இந்தியாவில், அஸ்ஸாமிலுள்ள காசிரங்கா தேசிய பூங்கா, மானாஸ் தேசிய பூங்கா மற்றும் லாகோவா புரசாபூரி ஆகியவற்றில் விழிப்புணர்வு திட்டங்களை நடத்துவதற்கு இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.

❖ **செப்டம்பர் 21 பன்னாட்டு கடற்கரை சுத்தப்படுத்தும் நாள்**

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தில் மூன்றாம் சனிக்கிழமை அன்று இந்தநாள் அனுசரிக்கப்படுகிறது.

❖ **செப்டம்பர் 23 – சைகை மொழிகளின் பன்னாட்டு தினம்**

- டிசம்பர் 19, 2017-ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை செப்டம்பர் 29ஐ சைகை மொழிகளின் பன்னாட்டு தினமாக அறிவித்தது.
- 2019 ஆம் ஆண்டின் மையக்கருத்து ''அனைவருக்கும் சைகைமொழி உரிமைகள்'' என்பதாகும்.

❖ **செப்டம்பர் 27 – உலக சுற்றுலா தினமாகும்.**

- ஐக்கிய நாடுகள் சபை செப்டம்பர் 27, 1980 ஐ முதலாவது உலக சுற்றுலா தினமாக கொண்டாட முடிவு செய்தது.
- 2019 ஆம் ஆண்டின் மையக்கருத்து ''சுற்றுலா மற்றும் வேலைகள்: அனைவருக்கும் ஒரு சிறந்த எதிர்காலம்'' என்பதாகும்.

அறிக்கை

சீனாவுடனான மாமல்லபுர வரலாற்று இணைவு - ஓர் அறிக்கை

❖ **பிரதமர் நரேந்திரமோடி மற்றும் சீன ஜனாதிபதி ஜி.ஜின்பின் இடையேயான இரண்டாவது இந்திய – சீன அமைப்புச்சாரா உச்சிமாநாட்டை கூட்டுவதற்கு மாமல்லபுரம் எதிர்பார்க்கப்படுகிறது.**

- மாமல்லபுரம் சென்னையிலிருந்து தெற்கே 50 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது மற்றும் 1700 ஆண்டுகளுக்கு முன்பு, சீனாவிற்கு மாமல்லபுரத்திற்கும் இடையே வர்த்தகதொடர்பு இருந்துள்ளது.

❖ **இந்தியாவில் ஒவ்வொரு மொழி பேசுவோரின் சதவீதம்**

இந்தி	-	43.6	அஸ்ஸாமிஸ்	-	1.3
பெங்காளி	-	8.0	மைதிலி	-	1.1
மராத்தி	-	6.9	சாந்தாலி	-	0.6
தெலுங்கு	-	6.7	காஷ்மீரி	-	0.6
தமிழ்	-	5.7	நேபாளி	-	0.2
குஜராத்தி	-	4.6	சிந்தி	-	0.2
உருது	-	4.2	டொக்கி	-	0.2
கனடா	-	3.6	கொங்கனி	-	0.2
ஒடியா	-	3.1	மணிப்புரி	-	0.1
மலையாளம்	-	2.9	போடோ	-	0.1
பஞ்சாபி	-	2.7	சமஸ்கிருதம்	-	Neg

குடிபெயர்ந்த மக்கள்தொகை - ஓர் அறிக்கை

❖ **2019-ல் பன்னாட்டு அளவில் குடிபெயர்ந்த மக்கள்தொகையின் எண்ணிக்கை 221 மில்லியனிலிருந்து கிட்டத்தட்ட 272 மில்லியனானது.**

- 2019 ஆம் ஆண்டின் நிலவரப்படி, இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதாவது, 17.5 மில்லியன் இந்தியர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்.
- சிரியாவில் நடக்கும் யுத்தம் காரணமாக, அந்நாட்டின் 8.2 மில்லியன் மக்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்.
- மற்ற நாடுகளிலிருந்து குடிபெயர்பவர்களை அதிக அளவு ஈர்க்கும் நாடாக தொடர்ந்து அமெரிக்கா உள்ளது.
- அமெரிக்கா 2019 ஆம் ஆண்டின் நிலவரப்படி, 50.7 மில்லியன் மற்ற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தோர்களைப் பெற்றுள்ளது.

❖ **இந்தியாவின் புலம்பெயர் 2019 ஆம் ஆண்டின் படி, உலகத்திலேயே அதிகமாக 17.5 மில்லியனாக உள்ளது. இது உலகிலுள்ள மொத்த குடிபெயர்வு மக்களான 272 மில்லியனில் 6.4 சதவீதமாகும்.**

- UAE, அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் மிக அதிகமான எண்ணிக்கையிலுள்ள இந்தியர்கள் புலம்பெயர்ந்துள்ளனர்.
- UAE க்கு 3.4 மில்லியன், அமெரிக்காவிற்கு 2.6 மில்லியன் மற்றும் சவுதி அரேபியாவிற்கு 2.4 மில்லியன் இந்தியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.
- உலகிலேயே அதிகமான எண்ணிக்கையுள்ள (கிட்டத்தட்ட 51 மில்லியன்) மற்ற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்த மக்களை அமெரிக்கா பெற்றுள்ளது.

தனியார் நிறுவன வரி குறைப்பு – ஓர் அறிக்கை

❖ **தனியார் நிறுவன வரிமுறையை குறைப்பதற்கு ஒரு இடைக்காலச் சட்டத்தை அறிமுகப்படுத்தி மத்திய அரசாங்கம் வரலாற்று முயற்சியை மேற்கொண்டது.**

- அதன்படி, உள்நாட்டு நிறுவனங்களுக்கான தனியார் நிறுவன வரி 29.5 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.
- அதேபோல, புதிதாக தொடங்கும் நிறுவனங்களுக்கு 17 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

தாமஸ் குக் திவாலா – ஓர் அறிக்கை

❖ **பிரிட்டிஷ் போக்குவரத்து நிறுவனமான தாமஸ் குக் செப்டம்பர் 23-ல் திவாலானது.**

- இந்த விமான நிறுவனம் 178 வருட பாரம்பரியமிக்கதாகும்.
- தனியார்களிடமிருந்து முதலீடாகப் பெற்ற 200 மில்லியன் பவுண்ஸ் கடனில் மூழ்கி திவாலானது.
- 2012 ஆகஸ்ட்டிலிருந்து தாமஸ் குக் இந்தியா குழு தாமஸ் குக் இங்கிலாந்து குழுவுடன் தொடர்பில் இல்லை.

2021 மக்கள்தொகை கணக்கெடுப்பு – ஓர் அறிக்கை

❖ **மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கருத்திற்கிணங்க, முதல் முறையாக 2021-ன் மக்கள்தொகை கணக்கெடுப்பின் காகிதமில்லாத எண்ணியல் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.**

- முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1865-ல் நடத்தப்பட்டது.
- 2021-ல் நடத்தவுள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பு 16வது கணக்கெடுப்பாகும்.
- இக்கணக்கெடுப்பு 16 மொழிகளில் நடத்தப்படும்.
- 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கு ரூ.2,200 கோடி செலவானது.
- ஆனால், 2021 ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கு ரூ.12,000 கோடி செலவிடப்படவுள்ளது.
- ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சலபிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களுக்கு 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான குறிப்பு கருத்துக்கள் அக்டோபர் 1, 2020 லும், நாட்டின் மற்ற பகுதிகளுக்கு குறிப்பு தேதி மார்ச் 1, 2021 ஆகவும் இருக்கும்.